# சாஸ்வதம்

## இதழ் - 01

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2014



இந்துமாமன்றம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்வதம்

இந்து மாமன்றம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்வதம் சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ள
கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள்
யாவும் அக்கட்டுரைகளை எழுதியவர்களின்
சொந்தக்கருத்துக்கள் ஆகும்.
இவை இச்சஞ்சிகையை வெளியிடும்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக
இந்துமாமன்றத்தின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகா!

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியீடு**

*இந்து மாமன்றம்*
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக பூங்கா**
ஒலுவில் - 32360

*இதழாசிரியர்*
**சோ. ஷண்முகபிரியா**

*துணை ஆசிரியர்கள்*
**ம. கிருஸ்ணராஜ்**
**டி. பிறவுண்சன்**

*மேற்பார்வை*
**என். சுபராஜ்**
(விரிவுரையாளர்)

*கணினி எழுத்து*
**சோ. ஷண்முகபிரியா**

*அட்டை வடிவமைப்பு*
**எம். வினோஜ்**
(பொருளியல் விசேடதுறை)

*கணினி பதிப்பு*
**கோல்டன் அச்சகம், கல்முனை.**

**பக்கங்கள்** : I - XIV - 1 - 74

**விலை** : 200.00

## எண்ணம்

மனிதனாக பிறந்தால் நல்லெண்ணம் கொண்டவர்களாக வாழ வேண்டும். நல்லெண்ணம் கொண்டவர்கள் வாழ்க்கையில் ஒளிமயமாக பவனி வருவார்கள். ஏனெனில், நல்லெண்ணங்கள் நிறைந்த இதயத்தில் தீய சிந்தனைகள் உதயமாவதில்லை.

எண்ணம் போல் தான் வாழ்வு மலரும், நல்லெண்ணங்களுடன் வாழ்பவர்கள் நல்லவற்றையே அனுபவிப்பார்கள், தீயவற்றை எண்ணுபவர்கள் தீயவற்றையே தழுவுவார்கள். 'வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்'. இதுதான் உலக நியதி.

நல்லெண்ணம் வாழ்வில் நலிவைத் தராது. உலகமே போற்றும் நற்புகழுக்கு அது வகைசெய்யும். 'நல்லன எண்ண வேண்டும்' என பாரதி உரைக்கிறார். 'நல்லன எடுத்து அல்லன விடுத்தல் வேண்டும்' என்கிறார், அறிஞர் அண்ணா.

நம் உயர்விற்கும் வீழ்ச்சிக்கும் நாம் தான் காரணம். அதாவது, நமது எண்ணம் தான் காரணமாகும். நல்லெண்ணம் மரணத்தைக்கூட மண்டியிட வைக்கும் சக்தி கொண்டதாகும்.

நல்லெண்ணங்களை உடையோர் தோல்வி கண்டு சஞ்சலம் கொள்வதில்லை. வெற்றிகண்டு குதிப்பதுமில்லை. நாளை நடக்கும் என்ற அபார நம்பிக்கையில் செயல்களில் ஈடுபடுவர். நல்லெண்ணம் நல்வாழ்வின் திறவுக்கோளாகும்.

எனவே, நல்ல மானிடனாய் வாழ, நல்லெண்ணங்களை ஆபரணங்களாய் அணிந்து, பிரகாசமான வாழ்வினை நோக்கி பயணியுங்கள். என்றும், உங்கள் வாழ்வு வெற்றியை நோக்கியே நகரும்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDU SOCIETY
## SOUTH EASTERN UNIVERSITY OF SRILANKA

Address: South Eastern University Of Srilanka, University Park, Oluvil #32360
Email: seuslhindus@gmail.com Web: www.seuslhindus.page.tl

**2012 / 2013 கல்வி ஆண்டுக்கான**

## இந்து மாமன்ற நிர்வாகத்தினர்

| | |
|---|---|
| *Vice chancellor* | Dr. S.M.M. Ismail |
| *Senior President* | Dr. S. Anuzsiya |
| *Senior Treasurer* | Dr. P. Elango |
| *Internal Auditor* | Mr. M. Kanesalingam |
| *President* | Mr. R. Vimalraj |
| *Secretary* | Mr. M. Krishnaraj |
| *Treasurer* | Mr. M. Pirasanthan |
| *Editor* | Ms. S. Shanmugapriya |
| *Vice President* | Mr. P. Srivanajan |
| *Vice Secretary* | Mr. M. Saranraj |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

**தேவாரம்**

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரா் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிரு புன்கூருளானே.

**திருவாசகம்**

கடையவனேனைக் கருணையினாற்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவிசைப்பா**

பாடலங் காரப்பாசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.

**திருப்பல்லாண்டு**

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**திருப்புராணம்**

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன் புருவம் ஆனார்.

**திருப்புகழ்**

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உபவேந்தரின் ஆசிச்செய்தி

தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது அனைத்து இன மாணவர்களையும் ஒன்றிணைத்து உயர்கல்வியினை வழங்கிவருவதோடு சமய, சமூக, கலாசார விழுமியங்களையும் பாதுகாப்பதில் அக்கறை கொண்டிருக்கின்றது. இங்கு கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவமணிகளது கலை, கலாசார, பண்பாடுகளை அழிவடையாமல் பாதுகாத்து அதன் வளர்ச்சிக்காக பல்கலைக்கழக சமூகம் அர்ப்பணிப்புடன் செயலாற்றிவருகின்றது. இன்று இந்த பல்கலைக்கழகத்தில் அனைத்தின மக்களும் சிறப்பாக கற்ககூடிய சூழல் உருவாகியுள்ளது. இத்தகைய நல்ல சூழலை உருவாக்குவதற்கு எமது அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எமது பல்கலைக்கழகம் அனைத்து மதங்களையும் மதிப்பளித்து அவர்களது மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதற்கும் மதவழிப்பாட்டுத் தலங்களை அமைப்பதற்கும் இந்த நாட்டில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்பதில் எங்களுக்கு திடமான நம்பிக்கை இருக்கின்றது.

இந்த வகையிலே, இங்கு கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந்து மாணவர்களது சமய அனுஸ்டான தேவையினை மதிக்கும் முகமாக தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் பூங்காவில் இந்து ஆலயமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இது இந்து மாணவர்களின் அமைப்பான இந்துமாமன்றத்தின் தலைமையிலும் அவர்களின் அயராத முயற்சியின் வாயிலாகவும் ஆலய கும்பாபிஷேக நிகழ்வினை எட்டியுள்ளது. கும்பாபிஷேகத்திற்கான சிறப்பு மலரான 'சாஸ்வதம்' வெளியீட்டினை ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

சமகால மாணவர்கள் மேற்கத்திய கலாசாரத்தினையும் அவர்களின் பழக்கவழக்கங்களையும் இலகுவில் உள்வாங்கி அதன்பால் ஈர்க்கப்படல் அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு மதமும் சொல்லியுள்ள ஆன்மீக வழியில் இவர்கள் செல்லும் வீதம் குறைவடைந்து செல்வதினையே அண்மைக்கால கணிப்பீடுகள் எமக்குணர்த்துகின்றன. இதனை மாற்றி இச்சமூகத்தினை நல்வழிப்படுத்த ஆன்மீகமே சிறப்பு வழி. அவ்வாறானவொரு விடயத்திற்கு அடித்தளமிட்ட எமது மாணவர்கள் பல்கலைக்கழக தூரநோக்கினை சித்தியடையச் செய்துள்ளனர்.

முடிவாக, மாணவர்கள் ஒற்றுமையோடும் பரஸ்பர புரிந்துணர்வோடும் கல்வி வேள்விகளில் மிளிர பல்கலைக்கழக நிர்வாகம் அனைத்து விதமான உதவிகளையும் செய்ய தயாராக உள்ளதென கூறி இனிதே கும்பாபிஷேக நிகழ்வு நிறைவுற வாழ்த்துகின்றேன்.

- நன்றி -

**பேராசிரியர் எஸ்.எம்.முகம்மது இஸ்மாயில்,** (உபவேந்தர்)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துமாமன்ற பெருந்தலைவரின் செய்தி

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்துமாமன்றம் 2007இல் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் அக்காலகட்டத்தில் இந்து மாணவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்பட்டார்கள். பல்கலைக்கழகச் சூழலில் தங்கள் வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் அக்காலத்தில் இருக்கவில்லை. எனினும், தங்கள் மத பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கக் கூடிய விழாக்களை நடத்தும் அளவிலேனும் இந்து மாணவர்கள் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பான அமைப்பாக அது அமைந்தது.

அன்றைய துணைவேந்தர், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள் என்று சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை நல்கினர். இந்துக்கள் அல்லாத அவர்களுடைய பெருந்தன்மையான ஒத்துழைப்பாலும் ஊக்கத்தாலும் இந்து மாமன்றம் வருடாந்தம் பெரிய அளவிலே ஒரு கலை விழாவை எல்லோரது எதிர்பார்ப்போடும் ஏற்பாடு செய்துவந்தது. பல்கலைக் கழகத்திற்கு வெளியிலும் கோவில் வழிபாடு, சமூகத்தொண்டு முதலானவற்றில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்து இந்து மாணவர்கள் ஒன்றிணைவதற்கு வாய்ப்பான அமைப்பாக இம்மன்றம் திகழ்ந்து வருகிறது.

இன்றைய, சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தில், விடுதியில் இருந்தும் வெளியில் இருந்து வந்தும் பயிலும் இந்து மாணவர்கள் தங்கள் மனமொன்றிய வழிபாட்டினை நிகழ்த்துவதற்கு ஏற்றவகையில் ஆலயம் ஒன்றினை நிர்மாணிக்கும் பெருவாய்ப்பு கிட்டியுள்ளது.

மாணவர்கள், இறையருளின் துணையாலும் தங்கள் அயரா முயற்சியாலும் ஆலயத்தைக் கட்டிமுடித்து இன்று கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறார்கள். மன்றத்தின் வெளியீடான **'சாஸ்வதம'** சஞ்சிகையின் முதலாவது இதழையும் வெளியிடுகின்றார்கள்.

மகிழ்ச்சிகரமான இந்த சந்தர்ப்பத்திலே மாணவர்களின் ஆற்றலையும் முயற்சியையும் பாராட்டுகிறேன். மாணவர்களின் நன் முயற்சிகளுக்கு பூரண ஆதரவு நல்கும் துணைவேந்தர் கலாநிதி. எஸ். எம். எம். இஸ்மயில் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்திற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்துமாமன்றத்தின் சாஸ்வதமான பணிகளும் புகழும் பெருக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!

- நன்றி -



**கலாநிதி. எஸ்.அனுஷியா,**
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
இந்துமாமன்ற பெருந்தலைவர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துமாமன்ற பெரும்பொருளாளரின்

## வாழ்த்துரை

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஆலயத்தின் கும்பாபிஷேக சிறப்பு மலரிற்கு இச்செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**'செயற்கரிய செய்வார் பெரியார்'**

என்பதற்கமைய, இப்பல்கலைக் கழகத்தில் இவ்வாலயத்தை நிர்மாணித்த இந்து மாணவர்களின் விடாமுயற்சியும் அயராத உழைப்பும் மிகவும் போற்றத்தக்கது.

எண்ணிக்கையில் இந்து மாணவர்கள் குறைந்த அளவில் இருந்தபோதிலும் பெரிதளவில் சிந்தித்து, இவ்வாலயத்தை நிர்மாணித்த எமது மாணவர்களுக்கு இந்த இந்துமாமன்றம் என்றும் நன்றியுடையதாக இருக்கும்.

**'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது**
**எது நடக்கவிருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்'**

என்ற பகவத்கீதையின் வாசகங்களுக்கு இணங்க, இவ்வாலயத்தின் எதிர்கால நடவடிக்கைகளிலும் எல்லா மாணவர்களும் ஒற்றுமையுடனும் ஒரு மனதுடனும் செயற்பட வேண்டியது எமது கடமையாகும். இந்துக்களாகிய எமது ஒற்றுமையையும் கலைகலாசார விழுமியங்களையும் இவ்வாலயத்தினூடாக சகல இன மாணவர்களுக்கும் காண்பிப்போம்.

**'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'**

**கலாநிதி. பீ.இளங்கோ,**
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
இந்துமாமன்ற பெரும்பொருளாளர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துமாமன்ற தலைவரின்
## வாழ்த்துச் செய்தி

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாவிஷேக நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக சாஸ்வதம் சஞ்சிகை வெளியிடப்படுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது நீண்ட நாட்களாக பல இன, மத, மொழி பேசும் சமூகங்களை தன்னகத்தே ஒன்றாக இணைத்துக் கொண்ட ஒரு கலைக் கூடமாகும். மதமானது மனிதனை நல்வழிப்படுத்தும் சாதனமாக அமைவதோடு ஆன்ம ஈடேற்றத்திற்கும் துணை புரிகின்றது. இதன் காரணமாக பல்வேறு சமூகத்தினரும் தமது விருப்புக்கேற்ப அவரவரது சமயக் கோட்பாடுகளை பின்பற்றுகின்றார்கள். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரினது கருத்து உலக சமயங்களை ஒன்றிணைக்கின்றது.

எமது பல்கலைக்கழக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அமைவானது மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய ஊழியர்களின் விடாமுயற்சியின் பெறுபேறாகும். திருக்கோயில் முதல் மட்டக்களப்பு வரையிலான பிரதேசங்களுக்கு மாணவர்கள் கால்நடையாக சென்று இவ்வாலயத்திற்கான நிதியினை சேகரித்தனர். அவர்களுக்கும் இப்பணியினை தம் சிரம் மேற்கொண்டு செயற்பட்ட நல் உள்ளங்களுக்கும் இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் நவாகரன் அவர்களுக்கும் மற்றும் நிர்வாகத்தினருக்கும் இறைவனின் ஆசிர்வாதம் கிடைக்க பிரார்த்திப்பதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் ஆலயத்தினை அமைக்க அனுமதி தந்த உபவேந்தர் கலாநிதி எஸ் எம் எம். இஸ்மாயில் மற்றும் பதிவாளர், ஏனைய பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களில் எமது பணிகள் தொடர்வதற்கு பல்கலைக்கழக சமூகம் பூரண ஒத்துழைப்பினையும் ஆதரவையும் வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்

**ஆர். விமல்ராஜ்,**
இந்துமாமன்ற தலைவர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துமாமன்ற செயலாளரின் செய்தி...

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இந்துமாமன்றத்தின் தலைமையில் நிறைவுபெற்ற ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படும் இச்சஞ்சிகையில் மன்றத்தின் செயலாளர் என்றவகையில் நானும் ஒருபக்கத்தினை உங்களுடன் பங்கிட்டுக் கொள்வதினையிட்டு பெருமிதம் அடைகின்றேன். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற மூதாதையர் வாக்கின் மகத்துவத்தை பல்கலைக்கழக சூழல் எமக்கு இன்று வரைக்கும் உணர்த்திய வண்ணமே உள்ளதென்பது கண்கூடான விடயமாகும். இன்றைய சமூக அமைப்பில் அனைத்து இனத்தவருக்குமே தங்களது வழிபாட்டுத் தலமானது சமயம், கலாசாரம் மற்றும் இனத்தின் குறியீடாக கொள்ளப்படுகின்றது. பல்லின சமூகத்தையும் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட எமது பல்கலைக்கழகத்தில் அவர்களின் மதவழிபாட்டிற்கென வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்தவகையில், இந்து மாணவர்களினதும் பிறரினதும் வழிபாட்டிற்கென அமைக்கப்பட்டதே இவ்வாலயமாகும்.

தற்போதய மாணவர்களின் இச்சிறிய முயற்சி இதற்கு பின்வரும் மாணவ சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**'அருவினை என்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்துசெயின்'**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு உரம் சேர்க்கும் வகையில் பலவருடமாக இந்து மாணவர்களுக்கென்றொரு வழிப்பாட்டிடம் இல்லாதிருந்தமையை கருத்திற் கொண்டு சிரேஷ்ட விரியுரையாளர்கள், சிரேஷ்டமாணவர்கள் மற்றும் புத்திஜீவிகளின் சிறந்த சிந்தனையில் உதித்ததே இவ்வாலய நிர்மாணமாகும். இத்தேவைப்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்த எமது மதிப்பிற்குரிய உபவேந்தர் கலாநிதி. எஸ். எம். இஸ்மாயில் அவர்கள் குறித்த ஆலயத்திற்கு தேவையான நிலப்பரப்பை தந்து எம்மை உற்சாகப்படுத்தினார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன் நிமித்தம், திட்டமிடப்பட்ட ஆலயத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆகம முறைக்கமைய கடந்த 2011.12.14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதனை நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்து மாணவர்கள் தமது வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் ஆன்மீக சாந்தியினை பெறுவதற்கும் மிகவும் சிரமப்படும் நிலையை, மாணவர்களாலேயே அறிந்த பெற்றோர்கள், அரசியல்வாதிகள் மற்றும் நலன் விரும்பிகள் என அனைவரும் முன்னின்று பல்வேறு நிதியுதவிகள் மற்றும் பொருளுதவிகளை செய்தமையிட்டு இந்து மாமன்றம் சார்பில் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைகளையும் உதவிகளையும் தந்துதவிய விரியுரையாளர்கள், ஊழியர்கள், இந்துமாமன்ற அங்கத்தவர்கள் என அனைவரினதும் பாரிய உழைப்பிற்கு மத்தியில்தான் ஆலயத்தின் கட்டுமானம் நிகழ்த்தப் பெற்றது. அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

'முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை' என்பது போல, மூன்று வருடகாலமாக மாணவர்களின் பல்வேறுபட்ட அயராத முயற்சியின் விளைவாக உருப் பெற்ற எமதாலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வினையிட்டு நாம் அனைவரும் பெருமையும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகின்றோம். இனிவருங் காலங்களிலும் இதனை கட்டிக்காத்து மேன்மையடையும் விதத்தில் நிகழ்ச்சி நிரல்களை நடாத்த வேண்டியது எதிர்கால மாணவ சமுதாயத்தின் மிக முக்கிய கடமையும் பொறுப்புமாகும். இதுவே, எங்களது அபிலாசையுமாகும்.

நன்றி,

ம.கிருஸ்ணராஜ்,
செயலாளர்,
இந்துமாமன்றம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துமாமன்ற பத்திராதிபரின் செய்தி...

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இந்துமாமன்றம் உருவாக்கப்பட்டு சில ஆண்டுகள் ஆனபோதிலும், இம்மன்றத்தால் பல நற்காரியங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளன. அளவில் குறைவான மாணவர்களை கொண்டதாக தென்கிழக்குப் பல்கலைக்கழக இந்துமாமன்றம் காணப்பட்டபோதிலும், அவர்களது அயராத முயற்சியினால் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் பல்கலைக்கழக வளாகத்தினுள் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. காணப்பட்டபோதிலும், அவர்களது அயராத முயற்சியினால் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் பல்கலைக்கழக வளாகத்தினுள் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் கும்பாபிஷேக சிறப்பு மலராக 'சாஸ்வதம்' வெளியிடப்படுகின்றது. இம்மலர் இந்துமாமன்றத்தின் முதலாவது வெளியீடாகும்.

இந்து மாமன்றத்தின் முதலாவது மலரை வெளிக்கொணரும் பாரிய பொறுப்பு எனக்கு வாய்த்ததை எண்ணி பெருமகிழ்வடைகின்றேன். இவ்வாறான, வெளியீட்டை வெளிக்கொண்டு வரவேண்டும், என்ற இந்து மாமன்றத்தை சார்ந்தவர்களின் பிரயத்தனம் வீண்போகவில்லை. சிறந்த ஆக்கங்களையும் சிந்தனைகளையும் சுமந்தவண்ணம் 'சாஸ்வதம்' பிறப்பெடுத்துள்ளது. இம்மலர், வாசம் மிகுந்தவண்ணம் உலாவந்து உயிர்வாழ வழியமைக்க வேண்டியது, வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். படைக்கப்படும் படைப்புக்களுக்கு உயிரளிக்கும் சக்தி படைத்தவர்கள் வாசகர்களே. இவ்வெதிர்பார்ப்புடன் உங்கள் கரங்களிலும் 'சாஸ்வதம்' மலர் மலர்ந்துள்ளது.

சாஸ்வதம் மலர் வெளிவருவதற்கு துணை நின்றவர்கள், இம்மலருக்கு ஆக்கங்களை தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவர்கள், இம்மலர் சிறப்பாக மலர்வதற்கு மேற்பார்வை பணியினை செய்துதந்த விரிவுரையாளர், திரு. என். சுபராஜ் அவர்கள், முன்னட்டையை அலங்கரித்து தந்த எம். வினோஜ் அவர்கள், இம்மலர் வெளிவர அனைத்து விதத்திலும் என்னுடன் துணைநின்ற சகோதரர்கள் ம.கிருஸ்ணராஜ், டி.பிறவுண்சன் மற்றும் அச்சுப்பதிப்பில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இதேபோன்று வருடாந்தம் சாஸ்வதம் மலர் வெளிவருவதற்கும் அனைவரும் துணை நிற்க வேண்டியது, இந்துமாமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். சிறந்த படைப்புகளுடன் சாஸ்வதம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு எனது வாழ்த்துக்கள்.
'இனி தடையில்லை சாஸ்வதம் மலரை கடலாழங்கண்டு களித்திருக்க.......'

- நன்றி -

**சோமசுந்தரம் ஷண்முகபிரியா** (பத்திராதிபர்)
இந்துமாமன்றம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்- ஒலுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. அத்வைதம் பேசும் பிரபஞ்சம் | 01 - 07 |
| - ப. ஜெயநந்தினி | |
| 2. அதர்வண வேதங் கூறும் மருத்துவச் சிந்தனைகள் | 08 - 11 |
| - ஜெ. லிங்கேஸ்வரி | |
| 3. அறிந்துக் கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள் | 12 |
| - ஈ. சுகன்யா | |
| 4. ஆறுமுகநாவலர். | 13 - 14 |
| 5. இந்து சமய ஆசார நம்பிக்கைகள் | 15 |
| - ச. குணசாந்தி | |
| 6. இந்து சமயமும் சமய நல்லிணக்கமும் | 16 - 22 |
| - க. இரகுபரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) | |
| 7. இந்துக்களின் திருமணம் பற்றிய ஓர் அறிமுகம் | 23 - 26 |
| - சி. செல்வகுமாரி (விரிவுரையாளர்) | |
| 8. இந்து மத சம்பிரதாயங்கள் | 27 - 28 |
| - க. தக்ஷாழினி | |
| 9. இந்து மதம் கூறும் இறப்பிற்கு பின் மனிதனின் பாவபுண்ணி விளைவுகள் | 29 - 30 |
| - ந. பிரியதர்ஷினி | |
| 10.இந்து மாமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | 31 - 32 |
| - எஸ். நவாகரன் | |
| 11.இந்து மாமன்றத்தின் முன்னாள் பொருளாளரின் இதயத்திலிருந்து... | 33 |
| - ஆ. நிதிராஜ் | |
| 12.இந்து மாமன்றத்தினால் நாடாத்தப்பட்ட சில நிகழ்வுகள்... | 34 - 35 |
| 13.இறைவனைத் தேடி | 36 |
| - லோ. சந்தியா டிலானி | |
| 14.ஒருவனே தேவன் | 37 - 38 |
| - ரி. பிறவுண்சன் | |
| 15.திருக்கோவில் திருவிழாக்கள் ஏற்படுத்தும் மனித உறவின் புத்தாக்கம். | 39 - 44 |
| - ந. சுபராஜ் (விரிவுரையாளர்) | |
| 16.தென்கிழக்காசிய நாடுகளில் இந்து இலக்கியங்கள் | 45 - 49 |
| - ஆ. வனிதா | |
| 17.விநாயக உருவத்தின் தத்துவம் | 50 - 53 |
| - சோ. சண்முகபிரியா | |
| 18.சிவபுராணம் | 54 - 56 |
| - மாணிக்கவாசகர் | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்வைதம் பேசும் பிரபஞ்சம்

ப.ஜெயநந்தனி, மூன்றாம் வருடம்,
இந்து நாகரிக விஷேடகற்கை இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

கி.பி.8ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் 72 வகையான கொள்கைகளையுடைய மதப் பிரிவுகள் காணப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இவை கடவுள் உண்டு என்றும் கடவுள் இல்லை என்றும், கூறுவதோடு வேதத்தின் கர்ம காண்டத்தின் பகுதியான மீமாம்சை கொள்கைகளை ஏற்றும், ஞான காண்டமாகிய உபநிடதங்களை மறுப்பவைகளாகவும் செயற்பட்டு வந்தன. இத்தகைய, ஒரு சூழ்நிலையில் தான், **'சம்போர் மூர்த்தி சரதி புவனே சங்கராச்சார்ய ரூபா'** என்று போற்றப்படும் சங்கரர் தோன்றி அத்வைதத்தைப் படைத்தார். இவரது தத்துவத்தின் அடிப்படைக் கருத்தை அரைச்சுலோகத்தில் தத்துவாசிரியர்கள் விளக்குகிறார்கள்;

**'பிரம்மம் சத்தியம் ஜகத் மித்தை ஜீவ பிரம்மம் ஏவ ந அபர பிரம்மம்'**

அதாவது, இவ்வுலகம் அநித்தியம் ஜீவனும் பிரம்மமும் ஒன்று என்றார். இதை நிறுவுவதற்கு இவர் சில பிரமாணங்களை கையாண்டுள்ளார். பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம், அருத்தாபத்தி, அனுபலப்தி, உபமானம் போன்றவற்றை கூறலாம். இவற்றோடு, தானெழுதிய உரைகளான கேன, கட, ஈச, முண்டக, பிரசின, மாண்டுக்கிய, ஐதரேய, தைத்திரேய, பிருகதாரணிய, சாந்தோக்கிய போன்ற தச உபநிடதங்களையும் பிரம்மசூத்திரம், பகவத்கீதை போன்றவற்றையும் தானெழுதிய நூல்களான உபதேசசாஸ்ரீ, விவேகசூடாமணி போன்றவற்றையும் தன் மூலாதாரங்களாக கொண்டுள்ளார்.

நாம் அத்வைதம் பேசும் பிரபஞ்சம் பற்றி பார்ப்பதற்கு முன், ஏனைய பிரம்மம், ஆன்மா பற்றி நோக்குதல் சிறப்பு. காரணம் உலகை நிறுவுவதன் நோக்கமே பிரம்மமும் ஆன்மாவும் ஒன்று எனக் கூறுவதற்கேயாகும்.

அந்தவகையில் பிரம்மம் என்பது, 'குணமற்ற நிர்க்குணம்; உருவமற்ற நிராகாரம்; நிர்விசேசம் அடைமொழி அற்றது; செயலுக்கு காரணமற்ற அகர்த்தா; இதுவே ஆன்மா; இதை யாராலும் மறக்க முடியாது; மறப்பவனுடைய சாராம்சமாக இவ்வாத்மா உள்ளது; ஆத்மா உள்ளும் புறமும்; முன்னும் பின்னும்; வலமும் இடமும்; மேலும் கீழும் சூழ்ந்துள்ளது; சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்பவை வெவ்வேறு தனித்தனி குணங்களல்ல, அவை பிரம்மத்தின் சாரமே!'

உலகம், வாழ்க்கை, அனுபவங்கள் இவை யாவற்றுக்கும் ஆதாரமாகவும் அடிப்படையாகவும் உள்ள தத்துவமே பிரம்மம். பிரம்மம் எதுவாக இல்லை என்று கூறலாமே ஒழிய எதுவாக உள்ளதென்று கூற முடியாது. இது குணங்களற்றது. இதனால்தான் உபநிடதங்கள் பிரம்மத்தை 'நிர்க்குணோகுணி' என்று கூறுகின்றன. எனவே, இத்தகைய பிரம்மம் தான் உலகாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியளிக்கிறதே தவிர உண்மையில் உலகம் என்ற ஒன்றில்லை என்றே சங்கரர் விளக்குகிறார். இவ்வாறு, இவர் விளக்க உபநிடதங்களில் கூறப்பட்ட கருத்துக்களே அடிப்படை. அதாவது, சாந்தோக்கிய உபநிடதம் கூறும் போது, 'நதிகள் சமுத்திரத்திலிருந்து தோன்றி சமுத்திரத்திரத்திலேயே மறைகின்றன. சமுத்திரமாகவே ஆகி விடுகின்றன. இதை நதிகள் அறியாதது போல் பிராணிகள் சத்திலிருந்து தோன்றினாலும் சத்திலிருந்து தோன்றியதை உணர்வதில்லை' என்று விளக்கியது.

பிருகதாரணியக உபநிடதத்தின் ஆரம்ப மந்திரமும் ஈசாவாஷ்ய உபநிடதத்தின் இறுதி சாந்தி மந்திரமும் கூறும் போது;

**'ஓம் பூர்ணமத ஓம் பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணம்...'**

என்கின்றது. அதாவது, தோற்றப்படாதன யாவும் பிரம்மத்தில் நிறைந்து நிற்கின்றன. நிறைவான பிரம்மத்திலிருந்து எல்லா உயிர்களும் எல்லா உலகங்களும் தோன்றின. இருப்பினும் நிறைவான பிரம்மம் நிறைவாகவே இருக்கிறது என்று கூறுகிறது.

இதற்கு சங்கரர் விளக்கம் கொடுக்கும் போது, 'உலகமாய் பிரம்மம் தெரிவதற்கு மாயையே காரணம்; முப்பொருள்களின் வேற்றுமை புலக்காட்சிக்குரியதே அன்றி உண்மையானதல்ல பிரம்மம் ஒன்றே அஞ்ஞானத்தின் காரணமாக பல்வகை பொருட்களாக காட்சியளிக்கின்றது. அவித்தையாகிய அஞ்ஞானத்தினின்று விடுதலை பெறுமிடத்து பிரம்மமே எங்கும் பரவியிருக்கும் பரிபூரண பொருள்' என்றார்.

இதை சங்கரரின் ஆஸ்தான குருவான கௌடபாதர் 'ஒரு பொருளின் உண்மை பொய்மை இரண்டினையும் அறிவதற்கு நமது புலன்களுக்கு தெரிவதை கொண்டு நிருபிக்க முடியாது என்றார். உதாரணமாக, கண்ணுக்கு தெரிவதாலோ காதால் கேட்பதாலோ கையால் தொட முடிவதாலோ எதையும் உண்மை என கூற முடியாது, எது எக்காலத்திலும் உள்ளதோ அதுவே உண்மை' என்றார்.

இதை சங்கரர் உலகம் ஒரு மாயை, பொய் தோற்றம் என்று விளக்க இரு வாதங்களை முன்வைத்தார்.

**1. விவர்த்தவாதம்**

**2. கனவுலகவாதம்**

இந்த இரு வாதங்களையும் பார்ப்பதற்கு முன் சங்கரர் கூறும் மாயை, அவித்தை ஆகிய சொற்பதங்களின் அர்த்தங்களை விளங்குவோமாயின் உண்மைப் பொருள் உண்மையில் எது என்பதை எம்மால் உறுதியாக விளங்கிக்கொள்ள முடியும். பிரம்மம், ஆன்மா, உலகம் ஆகிய மூன்றையும் விளங்க மாயையை மட்டுமே விளங்கினால் போதும் என தத்துவாசிரியர்கள் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயை என்பது, 'எல்லை இல்லா ஒன்றை எல்லைப்படுத்துவதும் உருவமில்லா ஒன்றை உருவப்படுத்துவதுமாகும்'. இது உபாதி, மித்யை, அவித்தை போன்ற பல பெயர்களைக் கொண்டது. நெருப்பின் சூட்டை எவ்வாறு விளக்க முடியாதோ அது போல் மாயையும் விளக்க முடியாததால் அது 'அநர்வசனீயன்' என்ற பெயரை பெறுகிறது. இது இல்லாத ஒன்றை தோற்றுவிக்கும் விஷேபன சக்தியையும் இருப்பதை மறைக்கும் ஆவரண சக்தியையும் கொண்டு ஆன்மாவை அஞ்ஞான இருளில் மூழ்கடிக்கிறது. இம்மாயையை சங்கரர் பயன்படுத்துவதால் தான் இவரது வாதம் 'மாயாவாதம' எனப்படுகிறது.

உதாரணமாக, நாம் ஒரு புகைவண்டியில் அமர்ந்திருக்கிறோம், அது அப்படியே நிற்கிறது, பக்கத்திலுள்ள ஒரு புகைவண்டி புறப்பட்டு செல்கின்ற போது போகும் புகைவண்டி நிற்பது போலவும் நாம் உட்கார்ந்திருக்கும் புகைவண்டி நகருவது போலவும் தோன்றும். இச்செயற்பாட்டை ஒத்ததே மாயையின் செயற்பாடாகும். எல்லையில்லா ஒரு பொருளை எல்லைப்படுத்தி மூலமாக உள்ள பொருளிலிருந்து உலகை உற்பத்தியாக்கும் விதத்தில் மாயை என்ற சொல்லை சங்கரர் கையாளுகிறார்.

விவர்த்தவாதம் என்பது 'ஒன்று இன்னொன்றாக மாறாமல் இருந்தபடி இருக்க மாறி விட்டதாக எண்ணுதலாகும்'. சங்கரர் பிருகதாரணியக, சாந்தோக்கிய உபநிடதங்களுக்கு எழுதிய உரைகள் இதை விளக்குகின்றன. இவ்வாதம் தோன்றக் காரணம், பிரம்மம் - சித்துப்பொருள், உலகம் - சடப்பொருள். அறிவே மயமான ஒன்றிலிருந்து அறிவுக்கு நேர்மாறான ஒன்று தோன்றாது. இச்சடவுடலுக்கு மூலமும் ஒரு சடப்பொருள். அதனூடே, உலகை தோற்றுவித்தது.

என கொண்டால் பிரம்மம் மட்டுமல்ல மூலப்பொருள் பிரம்மத்தோடு போட்டியிட கூடிய சிறப்புடைய வேறொரு மூலப்பொருளும் உள்ளது என்றாகிவிடும். இது மூலப்பொருள் ஒன்று என்ற உபநிடத கருத்திலிருந்து வேறுபட்டுவிடும். பிரம்மத்தின் மகிமை குறையும். மூலப்பொருள் பிரம்மத்தில் அடங்கியது என்றால் அது பிரம்மத்தின் ஒரு பகுதியாதல் வேண்டும். இது பொருந்தாது. பிரம்மமும் சடப்பொருள் போல் பகுதியாகிவிடும். எனவே, அது அழியும். இதனாலே, சங்கரர் பிரம்மம் ஒன்றாயும் பலவாயும் தானாயும் உள்ளது என்று விவர்த்தவாதத்தை முன்வைத்தார். இவ்வாதம் ப்ரத்ருபிரபஞ்சர் முன்வைத்த பிரம்ம பரிணாம வாதத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட வாதமாகும்.

இவர் இவ்வாதத்தை முன்வைக்க கயிறு, பாம்பு ஆகியவற்றை உதாரணமாக கொண்டதால், இவரது வாதம் 'கயிற்றரவுவாதம்' எனப்படும். அதாவது, தெருவில் செல்லும் ஒருவனுக்கு தூரத்தில் கிடக்கும் கயிறானது பாம்பு போல் தெரிகிறது. அது போல் பிரம்மம் தான் உலகாக மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு காரணம் மாயை. மாயை நீங்குகையில் உண்மை பொருள் எது என்பது புலப்படும். இங்கு காரண காரிய தொடர்பு பேசப்படுகிறது. காரணம் உண்மை காரியம் பொய்யாகும். காரணமாகிய கயிறு உண்மை, காரியமாகிய பாம்பு பொய்யாகும். அது போல், காரணமாகிய பிரம்மம் உண்மை, காரியமாகிய உலகம் பொய்யாகும், இவ்வாறு, காரணம் உண்மை காரியம் பொய் என்று கூறுவதால் இவரது வாதம் 'சற்காரணவாதம்' எனப்படும்.

இவர் இவ்வாறு கூற, இராமானுஜரோ காரணமாகிய பிரம்மம் உண்மையென்றால் இவ்வுண்மை பொருளிலிருந்து தோன்றிய காரியமாகிய உலகமும் உண்மை என்று 'பிரம்ம பரிணாமவாதம்' பேசினார். இதற்கு, பால், தயிர் ஆகியவற்றை உதாரணமாக கொள்கிறார். பால் தயிராவது போல் பிரம்மமே உலகமாய் மாறியுள்ளது என்றார். பிரம்மத்தின் சரீரமாக உலகம் உள்ளது என்றார். இவர் உபநிடதங்கள் கூறும், உள்ள பொருள் ஒன்று தான் என்பதை 'சுதந்திரமாக உள்ள பொருள் ஒன்று தான்' என்பதாகுமன்றி சங்கரர் கூறுவது போல், ஏனையவற்றை பொய்யாக்குவதன் மூலம் பிரம்மத்தை உள்ள பொருள் என்று கூறுவதாக அமையமாட்டாது என்றார்.

மேலும், பிரளய காலத்தில் பிரபஞ்சம் அனைத்தையும் தன்னுள் அடக்க பிரம்மமே கர்த்தா. படைப்பு குறிக்கும் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து காரண நிபந்தனைகளையும் பிரம்மம் தன்னுள் கொண்டுள்ளமையால் பிரம்மமே படைப்பிற்கு முழுக்காரணமாகவும் இருக்கிறது என்றார்.

இதனையே, மத்துவர் கூறும் போது, பிரம்மமே இயக்க காரணன், முதற்காரணன் அல்லா விடினும் உலகினை படைப்பவன். இயற்கையான இவ்வுலகு ஒரு மாயத்தோற்றம் அன்று, பரிணாமம் போல் அதாவது பால் தயிராவது போல் இறைவன் மாறுகிற வடிவ தோற்றமும் அன்று சத்துவம், இராஜஸம், தாமஸம் ஆகிய தத்துவங்களை தோற்றுவித்த பிரகிருதியே உலக தோற்றத்திற்கு காரணம். காரியம் உலகினை தோற்றுவித்த காரணத்தில் உள்ளது;

இல்லாமலும் உள்ளது. இது 'சதசற்காரியவாதம'. இவ்வாறு, சங்கரரின் வாதத்துக்கு எதிர் வாதங்கள் எழுந்தன. இனி அவரது அடுத்த வாதத்தை பார்க்கலாம்.

கனவுலகவாதமும் சங்கரருக்கு முன்பே கௌடபாதரினால் முன்வைக்கப்பட்டுவிட்டது. ஆழ்ந்த உறக்கத்தில் கனவு காணும் போது நனவு நிலை அழிந்து கனவு நிலையே உண்மை என தெரிகிறது. விழிப்பு வந்தவுடன் கனவு நிலை அழிந்து போக நனவு நிலை உண்டாகிறது. நனவு நிலையில் கனவு நிலை பொய்யாகிறது.

நனவுலகில் ஏற்படும் தாகத்தை நனவுலகில் கிடைக்கும் தண்ணீர் தீர்க்குமாயின் கனவுலகில் ஏற்படும் தாகத்தை கனவுலகில் கிடைக்கும் தண்ணீர தீர்க்கிறது. இத்தகைய காரணத்தால் தான் உலகின் பொய் மெய்யை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயிப்பதற்கு புலன்களுக்கு, விஷயமாவதும் தேவைகளை தீர்ப்பதும் சிறந்த உதாரணமாகாது என்றும் எது எக்காலமும் இடையறாது நிலைத்து நிற்கிறதோ அதுவே உண்மை ஏனைய யாவும் பொய் என்றும் அவர் நிறுவினார்.

சங்கரரோ மெய்ப்பொருளுக்கு மூன்று நிலைகளை கொடுத்துள்ளார். பிராதிபாஷிகம் (கனவு நிலை), வியாவகாரிகம் (நனவு நிலை), பாரமார்த்திகம் (கடந்த நிலை). அதாவது எங்ஙனம் வியாவகாரிக நிலையை அடையும் வரை அதாவது கயிற்றை பாம்பாக காணாது கயிறாகவே காணும் நிலை வரை பிராதிபாஷிக நிலை உண்மையோ அது போல் பாரமார்த்திக நிலையை அடையும் வரை வியாவகாரிக உலகமும் உண்மையாகும் என்றார்.

நாம் காணும் பொருள் உலகு, நாமரூபங்களின் உலகு ஆதாரமின்றி நிலவ முடியாது. ஆன்மா ஒன்றே தானாக நிலவவல்லது. உலகம் கட்புலக் காட்சியாக மட்டுமே உள்ளது என்றார். இருப்பினும் அத்வைதம் உலகம் உண்மையன்று; அது ஒரு தோற்றம் என்றாலும், அது மலடி மகன் போல, ஆகாயத் தாமரை போல இல்லாத பொருளுமன்று. அது சத்துமல்ல அசத்துமல்ல. இதனை வேறுபடுத்திக்காட்ட வேண்டும். எனவே தான் அது 'சதசத்விலக்ஷணம்' என அழைக்கப்படுகிறது.

இந்த உலகம் என்ற ஒன்றினால் பிரம்மம் இரண்டு நிலைகளை பெறுவதாக அத்வைதம் கூறுகிறது.

**1. மாயையோடு கூடிய நிலை- சகுண பிரம்ம நிலை**

**2. மாயையோடு கூடாத நிலை- நிர்க்குண பிரம்ம நிலை**

பிரம்மம் மாயையோடு சேரும் போது அதனை சகுண பிரம்மம் என்றனர். உண்மையாக உள்ள பொருள் ஒன்றே; அது நிர்க்குண பிரம்மமே. ஒன்று பல ஆவது தோற்றப்பாடு. அதுவே சிருஷ்டி. இந்த சிருஷ்டியை சகுண பிரம்மமாகிய ஈஸ்வரனே செய்கிறான். இந்த ஈஸ்வர நிலை தாழ்வான நிலை என அத்வைதம் கூறுகிறது. ஆனால், சைவ சித்தாந்தமோ ஈஸ்வர நிலைக்கும் பரமசிவ நிலைக்கும்.

சம அந்தஸ்தே கொடுக்கிறது. இறைவன் நிமித்த காரணனாக நின்று சக்தியை துணைக்காரணமாகவும் மாயையை முதற்காரணமாகவும் கொண்டு உலகைப் படைத்தான் என்று உலகப் படைப்புப் பற்றி கூறி, சடப்பொருளுக்கு சடப்பொருள் தான் மூலமாய் இருக்கும்; சித்திலிருந்து சடம் தோன்றாது என 'சற்காரியவாதம்' பேசுகின்றனர்.

ஆனால், ஏனையவற்றை மறுப்பது போல் சங்கரர் முன்பதாகவே மாயை ஈஸ்வரனுக்கு புற ஒட்டாக உள்ளது. பிரபஞ்சமனைத்தும் மாயையின் காரியமாயிருப்பது போல் தனி அகத்தின் பரு உடல், நுண் உடல் ஆகியவற்றை உதோற்றமாக உள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், உலகிற்கும் ஆன்மாவிற்கும் முற்றொருமையை உணராதோருக்கு அது தோற்றமன்று. அது உணராத வரை உலகை நாம் உண்மையென்றே கருத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமாக உள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், உலகிற்கும் ஆன்மாவிற்கும் முற்றொருமையை உணராதோருக்கு அது தோற்றமன்று. அது உணராத வரை உலகை நாம் உண்மையென்றே கருத வேண்டும்.

சிருஷ்டி நிகழ்கிறதே தவிர உண்மையில் அவ்வாறு நிகழ்வதில்லை; புறப்புலன் வாயிலாக உள்மனம் புறப்பொருளோடு தொடர்பு கொள்ளும் போது அதன் வடிவுக்கேற்ப அது உறுமாறுகிறது என சங்கரர் கூற, 'பலர் நாம் அனைவரும் உலகை காண்கிறோம்; ஏனைய ஆன்மா, பிரம்மத்தை காணவில்லை; ஆதலால், உலகம் உண்மை; ஏனைய இரண்டையும் பற்றி நிச்சயமாக எதுவும் கூற முடியாது' என்றனர்.

இதற்கு, சங்கரர், "மித்யை எனும் மாயையை உலகிலிருந்து பிரித்தடையாளம் காண முடியாது. இதனால், இது உலகோடு பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டுள்ளது. இது 'தாதாத்மியம்' எனப்படும்" என்று கூறுகிறார்.

ஆனால், சாங்கிய தரிசனம் கூறும் போது, பிரபஞ்சத்திற்கு மூலமாக உள்ளது அசேதன, அறிவற்ற பொருளான பிரகிருதியே எனக் கூற சங்கரர் அறிவற்றதான ஒன்றிலிருந்து உலகமும் அறிவு சார்ந்த உலக ஒழுங்கும் தோன்ற முடியாதென கூறினார். அதாவது, கல்லும் சீமெந்தும் சேர்ந்து சுவராக முடியாது. சுவரை கட்டுவோன் அறிவும் செயற்றிறமும் உடையவனாய் இருத்தல் வேண்டும். சடபொருள் சேர்ந்து சுவராக முடியாது என்றார்.

யோக தரிசனகாரர், உலகிற்கு நிமித்த காரணராய் பிரம்மம் அரசன் போல் உயிர்களை ஆண்டு வருகிறான் என்று கூற சங்கரர், கடவுள் அரசராகி தம் விருப்பம் போல் ஒரு சிலரை செல்வராயும் வேறு சிலரை ஏழையாக்கி தம் விருப்பம் போல் ஆட்சி செய்வாரென்றால் அவர் நீதியாளர் அல்லாதவர் என்றாகி விடுவார் என்றார்.

பிரம்மம் உலகாக பரிணமிக்கிறது என்றால் உலகப் படைப்பனைத்தும் பூரணமும் பேரறிவும் உடையதாய் காணப்பட வேண்டும். ஆனால், அவ்வாறில்லை என்றும் மறுப்பதோடு அனைத்தும் சூனியம் என்று கூறும் சூனிய வாத பௌத்த மதக்கருத்துக்களையும் இவர் எதிர்த்தார். இவ்வாறு, அத்வைதம் பிரபஞ்சம் பற்றி கூறிச் செல்ல, சங்கரரின் இத்தகைய கருத்துக்களையே மாக்ஸ்முல்லர், ஷில்லர், பிறட்லி, கிறின் போன்றோரும் ஏற்று 'எல்லையில்லா பொருளிலிருந்து எல்லைக்குட்பட்ட இந்த உலகமும் உயிர்களும் உற்பத்தியாகின்றன' என்றனர்.

எனவே, தொகுத்து நோக்கும் போது, 'அத்வைதம் பேசும் பிரபஞ்சம் பொய் தோற்றம்; பிரம்மம் ஒன்றே உண்மை; மற்றவை யாவும் தோற்றங்கள்; தோற்றங்களுக்கு காரணம் மாயை; உண்மை ஞானத்தினால் மாயை மறைய நிர்க்குண பிரம்மம் ஒன்றே எஞ்சும்; அதுவேயாதலே முக்தி; அதை அறிந்து நீயே பிரம்மமாகி விடு' என்று வெறுமனே உபநிடதங்களை மட்டும் கொள்ளாது அனுபவ அறிவையும் சிறந்த உத்திகளையும் கையாண்டு அத்வைதச் சிந்தனையை சங்கரர் நமக்களித்தார்.

**'ஸர்வம் பிரம்ம மயம்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உசாத்துணைகள்:*

1.லக்ஷ்மணன்.கி, (1960), இந்திய தத்துவ ஞானம், ஏசியன் அச்சகம், சென்னை.

2.மகாதேவன்.த., (2007), இந்து நாகரிகம், அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு.

3.ஹிரியண்ணா.எம்., (2008), இந்திய மெய்யியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

4.சுப்ரமணியன்.நா., (1996), இந்திய சிந்தனை மரபு,சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.

5.கந்தசாமி.சோ.நா., (2007), இந்தியத் தத்துவக் களஞ்சியம், மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதர்வண வேதம் கூறும் மருத்துவச் சிந்தனைகள்

செல்வி. ஜெகநாதன் லிங்கேஸ்வரி, நான்காம் வருடம்,
இந்து நாகரிக விஷேடகற்கை இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

இந்து சமயத்தின் மூல நூலாக வேதங்களே காணப்படுகின்றன. இருக்கு, யசூர், சாமம் ஆகிய மூன்று வேதங்களும் திரையீ வித்யா எனப்போற்றப்பட்டன. அதர்வண வேதம் மாந்திரீக கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தமையால் வேதத்தில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிற்காலத்தில் இருக்கு வேதம் போன்று இறைவனைப் போற்றித்துதிக்கும் பாடல்களை கொண்டிருந்தமையாலும் இறைவனை நோக்கிச் செய்யப்படும் கிரியைகளை கொண்டிருந்தமையாலும் நான்காம் வேதமாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதர்வம், என்பதன் பொருள் மாந்திரீக விதிகளின் அறிவு என்பதாகும். இவ்வேதம் அதர்வவேத சம்ஹிதை, அதர்வாங்கிரஸ், பிரம்ம வேதம், பைஜ்ய வேதம் என பல பெயர்களால் அழைக்கப்படும்.

அதர்வ வேதம் மருத்துவச் சிந்தனைகளை நிறைவாகக் கூறுகிறது. நோயின் சிகிச்சையை அறிவிப்பதால் பைஜ்ய வேதமென அழைக்கப்படுகிறது. இதன் மருத்துவக் குணம் பற்றி மாக்ஸ்முல்லர், "விபத்துக்களை தவிர்க்கும் அல்லது அதற்கான தீர்வு அதர்வ வேதத்தில் காணப்பட்டதால் இதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் பழங்கால இந்தியாவில் ஏற்பட்டது" என்கிறார். இவ்வேதம் 20 காண்டங்களையும் 760 அதிகாரங்களையும் 6000 மந்திரங்களையும் கொண்டதாகும். இதன் 1-13 வரையிலான காண்டங்களில் பிரார்த்தனைகள், கெட்ட தேவதைகளிடமிருந்து பாதுகாப்பு, பாம்புக்கடி, ஆசிகள், சாபங்கள், காதலில் வெற்றி, வர்த்தகம், சூதாட்டம் என்பன கூறப்பட்டுள்ளன. 14ஆம் காண்டம் திருமண சடங்குகளையும், 15 ஆம் காண்டம் அலைந்து திரியும் பிச்சைக்காரர்கள் பற்றியும், 16ஆம் 17ஆம் காண்டங்கள் வித்தைக்காரர்கள் பற்றியும், 18ஆம் காண்டம் முன்னோருக்கு உணவளித்தல் பற்றியும் கூறுகின்றது. 19ஆம் காண்டம் துதிப்பாடல்களையும் 20ஆம் காண்டம் இந்திரனுக்குரிய துதிப்பாடல்களையும் கொண்டுள்ளன.

நோய்கள் பற்றிக் கூறிய அதர்வண வேதம், நோய்கள் ஏற்படும் உடல் உறுப்புக்கள் பற்றியும் குறிப்பிடுகிறது. 10ஆம் காண்டம் 462ஆம் சூக்தம், சிரம், வாய், செவிகள், தாடைகள், நாசிகள், கொம்புகள், கண்கள், நுரையீரல், கல்லீரல், அந்திரம், மலக்குடல், சருமம், மச்சை, உதிரம், தோல்கள், தொடைகள், இடைநகங்கள் போன்ற உடல் உறுப்புகள் பற்றிக் கூறுகிறது. அதர்வண வேதம் நோய்களோடு நோய் நிவாரண மூலிகைகளை பற்றியும் கூறியுள்ளமை சிறப்பாகும்.

தலை தொடர்பான நோய்கள் பற்றி குறிப்பிடுகையில்;

**'எங்கும் வீரியமுள்ளவனே! தலைவலியையும்.... கீழே சாய்த்து விடு'** (19:555:10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது. இன்னுமொரு பாடல்;

**'தலைநோயின் எதிர்ப்பையும் கண்களின் குறையையும்**

**திவ்யமான திடமாயுள்ள குஸ்டம் நீக்கட்டும்'**

என்கிறது. குஸ்டம் ஒரு மூலிகையாக கொள்ளப்படுகிறது. ஆங்கிலத்தில் இம்மூலிகை 'Costas specous or arubicces' என்றழைக்கப்படும். தலைமுடி வளர்வதற்கு 'சமீ' என்ற தாவரமும், ஆழமான வேருள்ள 'நிதத்தினி' எனும் செடியும் பயன்படுத்த வேண்டுமென அதர்வ வேதம் குறிப்பிடுகிறது. இதனை;

**'ஓசதியே தேவியான நீ திவ்யமான தரணியில் தோன்றி உள்ளாய் நிதத்தினியே!**

**நீ கேசங்களின் திடத்திற்காக......'** (6:309:0)

என்ற சுலோகத்தினூடாக காணலாம். கண்நோய், காமாலை பற்றியும் இவ்வேதம் கூறுகிறது.

**'இவன் நோய் நீங்கி மஞ்சளாகாமல் இருக்க நீண்ட காலம் வாழ**

**உன்னை சிவப்புக் கதிர்களால் நாங்கள் சூழ்கிறோம்'** (1:22:2)

என்ற வேத பாடல், சூரிய ஒளியினால் காமாலை நோயை குணப்படுத்தலாம் என்கிறது.

**'ஜீவனோபாயம் நீ மஞ்சட்காமாலையின் சிகிச்சை'** (9:451:20)

என்ற பாடலில் காமாலையின் சிகிச்சைக்குரிய மூலிகை பற்றிக் கூறப்பட்டுள்ளது. விழியின் முன்தோலும் வெள்ளைப் பகுதியும் சேருமிடத்தில் வரும் கண் வீக்கத்தினை 09:451:4ஆம் பாடல் 'அலஜம்' எனும் பெயர் கொண்டு அழைக்கிறது.

கண்டமாலை, இருமல், காசநோய் போன்ற பிணிகள் பற்றி அதர்வண வேதம் குறிப்பிடுகையில், கண்டமாலை ஒரு வகை கொப்புளங்களாக அறியப்படுகிறது. காசநோயினை 'யஸ்மம்' எனும் பெயர் கொண்டு அழைக்கிறது. காசநோய் பரவும் இடங்களை வேத பாடல்;

**'உனது கழுத்து பிடரிகளினின்றும் மார்பெழும்பு முதுகெழும்பினென்றும் கைகள் தோற்பட்டைகளினின்றும் யஸ்மத்தை கண் நீக்குகிறேன்'** (2:69:2) என்கிறது.

சிறுநீரகம் பற்றிய கருத்துக்களும் அதர்வண வேதத்தில் காணப்படுகின்றன. சலத்தை அடக்கக் கூடாது என்பதனை கீழ்வரும் பாடலினூடாக காணலாம்.

**'வில்லில் இருந்து சரம் பறந்து பாய்வது போல உனது சலம் அனைத்தும் முழக்கம் செய்து கொண்டு புறத்தில் பாய்க'** (01:03:08)

வயிற்றுப்போக்கினை நீக்கும் மருத்துவப் பயிற்சியினையும் அதர்வண வேதம் குறிப்பிடுகிறது. 10அடி வளரும் இம்முஞ்சம் எனும் ஒரு வகைப்புல்லின் தண்டை வயிற்றில் கட்டிக் கொண்டால் வயிற்றுப்போக்கு நீங்கும் என கீழ்வரும் அதர்வ வேதப்பாடல் குறிப்பிடுகிறது.

**'இம்முஞ்சம் நோய் நீர்லோகத்தின் நடுவே சூரியனைப் போல திரமாகுக'** (01:02:04)

பிரசவம் செய்வதற்கான மருத்துவப் பயிற்சியினையும் அதர்வாங்கிரஸ் அழகாக கூறியுள்ளது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'சனானங்கத்தை நாங்கள் விசாலமாக்குவோம் அன்னையே உனது அங்கத்தை தளர்திக்கொள்'** (01:11:03)

**'பாலனையும் தாயையும் பிரித்து தனிமையாக்குகிறேன் குமாரனை நஞ்சிக் கொடியினின்று நீக்குகிறேன்'** (01:11:05)

போன்ற வேதப்பாடல்களினூடாக அறியலாம். அறுவைச் சிகிச்சையின் பின்னர் இரத்தப்போக்கு ஏற்படாமல் இருக்கவும், சிகிச்சை நடந்த இடத்தினை குளிர்ச்சியாக வைத்திருக்கவும் ஈரமான மணலை அடைத்து வைக்க வேண்டுமென்ற மருத்துவச்சிந்தனையை இவ்வேதம் எடுத்தியம்புகிறது. இதனை; **'வில்லாகாரமான பெரிய மணல் நிறையும் நாடி உங்களைச் சூழ்ந்துள்ளது'** (01:18:04) என்ற சுலோகத்தினூடாக காணலாம்.

மேலும் நுரையீரலில் ஏற்படும் கொப்புளம் (09:45:12) பற்றியும், வாயுவினாலாகும் ஓசை (09:45:11) பற்றியும், வயிற்று வலி (09:45:09) பற்றியும் அதர்வவேதம் குறிப்பிடுகிறது.

எலும்பு தொடர்பான நோய்களை, தோறப்பட்டை மூட்டுவலி, விஸ்கந்தம் என்ற பெயரால் அழைக்கிறது. விஸ்கந்தத்தை ஜங்கிடம் எனும் மூலிகை தீர்க்கும் என்றும், யஸ்மம் எனும் செடி உடைந்த எலும்பை வளர்க்கும் என்றும் அதர்வ வேதம் கூறுகிறது. இதனை;

**'வலிமையால் வலிமையை வீழ்த்தும் வன்மையால் விஸ்கந்தத்தை விளக்கிய ஜங்கிடச் சிறப்பு எங்களைக் காத்திடுக'** (19:550:05)

**'உடைந்த எலும்பை வளர்ப்பவள் அருந்ததியே.......'** (04:114:01)

போன்ற பாடல்களினூடாக அறியலாம். இவற்றோடு, வாதநோய், பாரிசநோய், நாடிகள் பற்றின குறிப்புகளும் காணப்படுகின்றன.

காயம் ஏற்பட்டால் பிப்பிலி எனும் மூலிகையை பயன்படுத்தலாம் என்னும் மருத்துவச் சிந்தனையை;

**'பிப்பிலி வெட்டுப்புண்ணுக்கு மருந்தாகும், அதி புண்ணுக்கு சிகிச்சையாகும்'** என்கிறது வேதபாடல். மேலும் 'ரஜினி' எனும் (crcuma longa) மூலிகை வெண்குஸ்டத்தை நீக்கும் என்ற கருத்தினை அதர்வவேதம்;

**'ரஜினியே! இந்த வெண்குளியையும் நிறமாக்கு'** (01:23:01) என்கிறது.

ஜுரம் எனப்படும் காய்ச்சல் பற்றியும் இவ்வேதம் குறிப்பிடுகிறது. காய்ச்சலின் தன்மை, அறிகுறிகள் பற்றி கூறுகையில்;

**'சீதச்சுரத்துக்கு நமஸ்காரம் உக்கிர தாபத்திற்கு நான் வணக்கமளிக்கிறேன் ஒருநாள் விட்டு பின்னர் மூன்று தினத்திற்கு அப்பால் வரும் சுரத்திற்கு நமஸ்காரம் ஆகுக'** (01:25:04) என்கிறது.

மலேரியா காய்ச்சல் பற்றிய கருத்துக்கள் அதர்வவேதத்தில் காணப்படுவதாக கிரிபத் என்ற அறிஞர் கண்டுபிடித்தமை குறிப்பிடத்தக்கதாகும். மனநோயின் கொடுமையினை அதர்வவேதம், 'உன்மாதம்' அல்லது பைத்தியம் என்கிறது. பொதுவாக, உன்மாதம் கூடாத உணவு உட்கொள்வதாலும், தகாத பழக்கவழக்கங்களாலும் ஏற்படுகிறதென்பது இவ்வேதத்தின் கருத்தாகும். அறிவியல் நிறைந்த இக்கருத்து வியக்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேனிஸ் விஞ்ஞானி Mular என்பவர் நுண்ணிய கிருமிகள் பற்றி ஆராய்ந்தார். லூயி பாஸ்டர் கிருமிகளைப் பற்றி ஆராய்து 'Micro Biology' எனும் புதிய ஆராய்ச்சியின் தந்தையானார். இவர்களுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் அதர்வவேதம் நுண்கிருமிகள் பற்றிய விளக்கத்தை தந்துள்ளமை பிரமிக்கத்தக்கதாகும்;

'**கண்ணுக்குத் தெரியாத பலவகையான கிருமி நம் உடலில் வலை போல் பரவி இருக்கின்றன. சலுண அல்கண்டு எனப் பெயர் கொண்ட அந்தக் கிருமிகளை மூலிகைகளால் அழிப்போம்**' என்கிறது வேதம். அதர்வணத்தில் காண்டம் 02, சூக்தம் 31இல் கிருமிகள் பற்றிய பலவகையான விடயங்களைக் காணலாம்.

ஸுசிகா எனும் பெயர் கொண்ட காலரா நோய்க்கிருமிகள், தோல், புப்புசம், கல்லீரல், மண்ணீரல், சிறுநீர், பித்தாசயம், குடல் ஆகிய உறுப்புகளில் தங்குகின்றன. இவை கண்ணுக்கு புலப்படாது. எப்போதும் அசைந்து கொண்டே இருக்கும் என்கிறது அதர்வவேதம். மேலும் கந்தர்வர், அப்சரஸ், திமிரர், ஏகந்தங்கள் போன்ற பெயர்களைக் கொண்ட கிருமிகள் இருப்பதாக அதர்வவேதம் குறிப்பிடுகின்றது.

அதர்வணத்தில் இயற்கை மருத்துவம் சிறப்பிடம் பெறுகிறது. நீரின் மருத்துவக்குணத்தின் சிறப்பினை கீழ்வரும் அதர்வ வேதப் பாடல்கள் புலப்படுத்துகின்றன;

'**சலங்களின் நடுவே சகல சிகிச்சைகளுண்டு**' (01:06:02)

'**குதிரைக்கால்களால் எரிச்சலையுண்டுபண்ணும் எந்நோயையும் சலங்கள் நீக்குக**' (06:197:02)

அதர்வவேதம் இயற்கையின் மருத்துவக்குணத்தினை அழகாக கூறியுள்ளமையை காணலாம். நீர் - அப்போதே ஏற்பட்ட காயம், தோசம், தூக்கம், மரபு வழியாகத் தோன்றும் நோய்களைப் போக்கும். மண் - சர்ப்ப விசத்தை அறியும் தன்மையுடையது. நெருப்பு - குளிர்ச்சியால் தோன்றும் நோய்கள், எரிச்சல் போன்றவற்றை நீக்கும், சிறுநீர்த்தடையை அகற்றும். மின்னல் - உணவிலுள்ள கிருமிகளை அகற்றும். சந்திரன் - மரபு வழியாகத்தோன்றும் நோய்களைத் தணிக்கும். சூரியக்கிரகணம் - இருதயநோய், காமாலை, தலைநோய் போன்றவற்றை போக்கும். இவற்றோடு, மேலும் பல இயற்கை மருத்துவத்தினை இவ்வேதத்தில் காணலாம்.

அதர்வண வேதம் பல்வேறு வகையான மூலிகைகள் பற்றியும் கூறியுள்ளமையால் அது பிற்பட்ட மருத்துவ வளர்ச்சிக்கு காரணமாய் அமைந்துள்ளது எனக் கூறலாம்.

தொழிநுட்பம் வளர்ச்சி பெறாத காலத்திலேயே இவ்வேதம் வியத்தகு மருத்துவச் சிந்தனைகளை முன்வைத்துள்ளமை அதிசயத்தக்க விடயமென்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

ஈ.சுகன்யா, நான்காம் வருடம்,
இந்து நாகரிக விஷேடகற்கை இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

**கோயிலுக்கு ஏன் செல்ல வேண்டும்**

பாலில் நெய் மறைந்திருப்பதை போல, எல்லா இடங்களிலும் இறைவன் நிறைந்திருக்கின்றான். எங்கிருந்தாலும் அவனை வணங்கலாம். இருந்தாலும் கோயிலுக்குச் சென்று வழிபடும் போது பலன் இரட்டிப்பாக கிடைக்கும். ஒரு துணியை வெயிலில் காயப்போட்டால் உலர்ந்து போகும். அதே துணியை ஒரு லென்சின் கீழ் வைத்தால் கருகிவிடும். சூரியக்கதிர்கள் ஒன்றுதான். ஆனால், அது குவியும் போது சக்தி அதிகமாகிறது. வெளியிடங்களைவிட கோயிலில் இறைவனை வழிபடும் போது மன ஒருமைப்பாடு அதிகரிக்கும். இறைவழிபாட்டுக்கு முக்கிய தேவையே மன ஒருமைப்பாடுதான். அந்த சமயத்தில் செய்யும் பிரார்த்தனைக்கு சக்தி அதிகம். இது மட்டுமன்றி கோயிலுக்கு மனச்சுத்தமுடைய அடியார்கள் பலர் முற்காலத்தில் வந்து சென்றுள்ளனர். நல்லவர்களின் பாதம்பட்ட இடத்தில் நின்றாலே நம் பாவங்கள் கருகிப் போகும். கோயிலில் உள்ள படிக்கட்டுக்கள் கூட அடியவர்களின் திருவுருவங்கள் என கூறப்படுவதுண்டு. எனவே, வெளியிடத்தில் கடவுளை பிரார்த்தித்தாலும் வாரம் ஒருமுறையாவது கோயிலுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

**உருத்திராட்சை அணிந்தால் பாவந்தணியும்**

உருத்திராட்சை அணிந்தால் பாவந்தணியும் என்று ஓர் நம்பிக்கை உண்டு. இறை நம்பிக்கையின் பாகமாகவும் நெருக்கமாகவும் உருத்திராட்சம் அணியப்படுகின்றது. விதிப்படி உருத்திராட்சை அணிந்தால் பாவம் நீங்கும். கழுத்தில் முப்பத்திரண்டு, சிரசில் நாற்பது, காதில் ஆறு, கைகளில் பன்னிரண்டு, புயத்தில் பதினாறு, சிகையில் ஒன்று, விருஷிஸ் தானத்தில் நூற்றியெட்டு என்ற கணக்கில் உருத்திராட்சம் அணிந்தால் பரமேஸ்வர நிலையை அடையமுடியும். விதிப்படியில்லாவிட்டாலும் உருத்திராட்சம் அணியும் நபர்கள் அநேகமானோரை இன்றைய காலத்திலும் காணலாம். சிலர் தங்கம் அல்லது வெள்ளியால் உருத்திராட்சத்தை அணிவர். சிலர் நூலில் கோர்த்தும் உருத்திராட்சை அணிகின்றனர். விதிப்படியல்லாமல் இதை அணிவதால் சில தீங்குகள் வரலாம் என்று ஆசாரியர் வெளிப்படுத்துகின்றனர்.

உருத்திராட்சை அணிபவர்கள் உணவு விடயத்திலும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளவேண்டும் என்று போதிக்கின்றனர். உருத்திராட்சம் அணிந்திருப்பவர்கள் அசைவ உணவுகள் சாப்பிடக்கூடாது. போதைப்பொருட்கள், மதுபானம் முதலியவையும் பயன்படுத்தலாகாது. சிவப்பு வெங்காயம், வெள்ளைப் பூண்டு, முருங்கைக்காய் முதலியவற்றையும் தவிர்க்க வேண்டும்.

எக்காலத்திலும் உருத்திராட்சம் அணியத் தொடங்கலாம் என்றாலும் கிரகணம், விஷீசம் கிரமம், உத்தராயணம், தக்சணாயணம் போன்ற தினங்களில் உருத்திராட்சம் அணிந்தால் சகல பாவங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கும்.

**சில மணித்துளிகள்**

மூச்சுக் காற்று போல் நமது வாழ்க்கையில் ஓர் அங்கமாக தியானம் அமைய வேண்டும்.
கடவுளைத் தேடவே வாழ்க்கை கொடுக்கப்பட்டுள்ளது.
உலக எண்ணம் மறைந்தால் கடவுள் தோன்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகநாவலர் (1822-1879)

ஆறுமுகநாவலர் 1822இல் நல்லூரில் கந்தபிள்ளை, சிவகாமி தம்பதியினரின் மகனாகப் பிறந்தவர். கல்வி வேள்விகளில் சிறந்த நிலப்பிரபுத்துவக் குடும்ப பின்னணியிலேயே ஆறுமுகநாவலரின் தோற்றம் அமைந்தது. ஆரம்பத்தில் ஆறுமுகநாவலர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியர், நல்லூர் வேலாயுத முதலியார் ஆகியோரிடம் கல்வி கற்றார். இவர் தமிழ், ஆங்கில ஆசிரியராக பணியாற்றியுள்ளார். பின்னர், சமயத்தொண்டும் தமிழ்ப்பணியும் சமூகசேவையும் செய்வதில் அவர் நாட்டம் சென்றது. சைவசமய பிரச்சாரத்திலும் பாடசாலைகளை நிறுவுதிலும் பாடநூல்களை எழுதுவதிலும் பழைய நூல்களுக்கு உரைகள் எழுதுவதிலும் உரைநடையில் பல்வேறு விடயங்களை எழுதுவதிலும் நூல்களைப் பதிப்பிப்பதிலும் சமூகத்தொண்டு புரிவதிலும் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். 1849 இல் திருவாவடுறை ஆதினம் அவருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

ஆறுமுக நாவலர் ஈழத்து தமிழ் இலக்கிய ஆய்வாளர்களில் முன்னோடியாவார். அவர் தமிழ் உரைநடைக்கு அரும்பெரும் பணியாற்றியுள்ளார். இவர் வித்துவ நடையிற் செய்யுள் எழுதும் திறமை கைவரப்பெற்றிருந்த போதிலும் காலத்தின் தேவையையும் பொதுமக்களின் பயன்பாட்டையும் கருத்திற் கொண்டு உரைநடையையே தமது ஊடகமாகக் கொண்டார். வீரமாமுனிவருக்குப் பின் தமிழ் உரைநடையைப் புதிய பாதையிற் செல்ல வைத்தவராக ஆறுமுகநாவலர் விளங்கினார். இவரது உரைநடையில் இரு முக்கிய அம்சங்களைக் காணலாம். கடின சந்தி விகாரங்களைக் களைந்து, இலக்கண வழுக்கள் அற்ற முறையிலே அவர் உரைநடையைக் கையாண்டார்.

மேலும், ஆங்கில மொழியிற் பயன்படுத்துவது போன்று நிறுத்தற் குறியீடுகளைத் தமிழ் உரைநடையிற் பயன்படுத்தினார். நாவலரின் பல்வேறு பணிகளில் பத்திரிகை தொடர்பான அவரது பணியும் குறிப்பிடத்தக்கதாகும். உதயதாரகை, இலங்கைநேசன், இலங்காபிமானி ஆகிய பத்திரிகைகளினூடாக நாட்டுப் பிரச்சினைகளை மக்கள் முன் கொணர்ந்து, அவை தொடர்பாகத் தமது கருத்துக்களை வெளிக்காட்டினார்.


ஆறுமுக நாவலரின் சிறந்த பங்களிப்புக்களுள் ஒன்றாக விளங்குவது பதிப்புத்துறை சார்ந்த பணியாகும். பதிப்புத்துறையினும் நாவலர் ஒரு முன்னோடியாக விளங்கினார். 1849 ஆம் ஆண்டு முதலாக அவரது பதிப்புப் பணி தொடங்கிற்று. முதன்முதலில் திருவாசகம் திருக்கோவையார் ஆகியவற்றைப் பரிசோதனை செய்து தனது மாணவன் சதாசிவப்பிள்ளையின்பெயரால் வெளியிட்டார். சூடாமணி நிகண்டுரை, நன்னூல் விருத்தியுரை, திருக்கோவையார் உரை, திருக்குறள், பரிமேலழகர் உரை, சேதுபுராணம், இலக்கணக்கொத்து, பதினோராம் திருமுறை, திருமுருகாற்றுப்படையுரை, திருச்செந்தினிரோட்ட கயமகவந்தாதியுரை, குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு, ஏரெழுபது, திருக்கைவழக்கம், மறைசையந்தாதி, கோயிற்புராணமூலம், சிதம்பர மும்மணிக்கோவை, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, பட்டிணத்துப் பிள்ளையார் பாடல், மருதூரந்தாதியுரை, திருச்செந்தூரகவல், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி முதலான இலக்கண இலக்கியம் சார்ந்த நூல்களையும் சமயச் சார்பான வேறு சில நூல்களையும் ஆறுமுக நாவலர் பதிப்பித்தார். நாவலர் நன்னூற் காண்டிகையுரை, கோயிற்புராணவுரை, சிவதருமோத்திரவுரை முதலான உரைகளையும் பெரியபுராண வசனம் திருவிளையாடற் புராண வசனம் முதலிய வசன நூல்களையும் எழுதினார். அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு அவர் சில நூல்களையும் அகராதிகளையும் எழுதினார்.

பாடநூல்களாக முதற் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், சைவ வினாவிடை, இலக்கணச்சுருக்கம், இலக்கணவினாவிடை, இலங்கை பூமிசாஸ்திரம் ஆகியவற்றை ஆறுமுகநாவலர் எழுதி வெளியிட்டார். இவ்வாறாக நாவலரின் பணிகள் 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் சமய வளர்ச்சிகளிலும் முக்கியத்துவம் பெற்றனவாக விளங்குகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய ஆசார நம்பிக்கைகள்

சண்முகம் குணசாந்தி, மூன்றாம் வருடம்,
பொருளியல் விஷேடகற்கை- இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

**கற்பூரம் கொளுத்துவது பயனளிக்குமா!**

பொதுவாக, பூஜைகளுக்கு கற்பூரம் கொளுத்துவது வழக்கம். பலரும் இதைப் பூஜையின் பாகமாக இறையருளுக்காகச் செய்வதாகவே கருதுகின்றனர். ஆனால், கற்பூரம், சாம்பூராணி முதலியவை கொளுத்தும் போது அதன் புகை சென்று சேருமிடமெல்லாம் பொசிடிவ் (positive) சக்தி பரவுகின்றது. மேலும், சூழலிலுள்ள விஷ அணுக்களை அழிக்கவும் இந்த புகைக்கு சக்தியுண்டு. இதனால், இறையருளும் கிடைக்கப்பெறும். இந்த உண்மைகளை அன்றே அறிந்திருந்தனர், நம் முன்னோர்கள்.

**கோயிலுக்குள் செல்லும் முன் செருப்பை கழற்றிப் போடுவது ஏன்!**

செருப்பணிவது சுய கௌரவப் பிரச்சினையாக மக்கள் கருதுகின்றனர். புண்ணிய கருமங்கள் எல்லாமே காலணி இல்லாமல் செய்யவேண்டும் என்று கூறுவது உண்டு. கோயிலில் நுழையும் போது செருப்பணியல் ஆகாது என்பது கட்டாயம். இந்தத் தடை காரணமாக சிலர் கோயிலுக்கு வெளியில் நின்று வணங்கிவிட்டு செல்வதையும் நாம் காண்கின்றோம். கோயில் சுவர்களுக்குட்பட்ட இடம் தெய்வ பூமி என்பதே இந்துமத நம்பிக்கை. இறைவன் வேறெங்கும் நிலைக்கொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டாம். செருப்பை களைந்து கோயிலுக்குள் நுழையும் பக்தரின் பாதங்கள் இயல்பாகவே காந்த சக்தியுடைய தரையில் பதிகின்றன. மனிதனின் உடல் நலத்துக்கு உத்தமமானதெனக் கண்டறிந்துள்ள பூமியின் காந்த சக்தியின் ஒழுக்கு, பாதம் தரையில் பதியும் போது உடலுக்குள் செலுத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல,. மூலிகைகளுடைய மலர்களும் இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியானதால் கோயில் சுற்றுமுள்ள மண்ணுக்கு மருத்துவ குணங்களும் உண்டு.

இவையெல்லாம், மனதில் கொண்டு கர்வத்தையும் காலணியையும் களைந்து இறை தரிசனம் செய்யும் போது நவீன சாஸ்திரம் விவரிக்கின்ற 'மாக்னடிக் தெரபி' அல்லது காந்த சிகிச்சை நம்முள் நடக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் சமய நல்லிணக்கமும்

**க. இரகுபரன், முதுநிலை விரிவுரையாளர்,**
**மொழித்துறை - இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்**

இன்றைய உலகில் வழக்கில் உள்ள பிரதான சமயங்களுள் ஒன்று இந்து சமயம்; உலகில் மிகத் தொன்மையான சமயமும் அதுவே. தனியொரு நபரால் நிறுவப்படாத இயற்கையான மதம் அது. ஆகையால், அதன் தொடக்ககாலம் எது என்று கூறுதற்கு இயலாது. அம்மதம் உலக தருமங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கும் பரந்த நோக்கினை உடையதாகையால் அது ஒருபோதும் அழியப்போவதும் இல்லை. இறைவனைப் போலவே இந்துமதமும் ஆதி அந்தம் அற்றது. புராதன காலத்திலேயே இந்த உண்மை உணரப்பட்டிருந்தது. ஆகையாலேயே, பண்டைக் காலத்தில் 'ஆதியந்தம் அற்றது' என்று பொருள்படுவதான 'சநாதன தர்மம்' என்ற பெயர் அம்மதத்திற்கு வழங்கியது.

சநாதன தர்மம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது; வேதம் அறிவை – வித்தையைத் தருவது. அந்த அறிவு சாதாரண உலகியல் அறிவு அன்று. ஆன்மா பற்றிய – கடவுள் பற்றிய – எமது மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட பெரும் சக்தி பற்றிய அறிவு. மனிதனால் ஆக்கப்பட்டது அன்று என்ற கருத்தில் வேதத்துக்கு 'அபௌருஷேயம்' என்ற பெயர் வழங்குகிறது. அது எழுதப்படாது வாய்மொழி மூலமே புராதன காலந்தொட்டுப் பேணப்பட்டு வந்தது. ஆகையால், சுருதி (கேட்கப்படுவது) என்ற பெயரினைப் பெற்றது. இன்று உலகிலே காணப்படும் இலக்கியங்களுள் வேதமே தொன்மையானது அத்தகையதான வேதமே இந்துப் பண்பாட்டு மரபுக்கு அடித்தளமானது. இந்திய சிந்தனை மரபுகள் அனைத்தும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டே விரிவு பெற்றன. சமய வழிபாட்டு மரபுகள் யாவுக்கும் வேதமே அடிப்படை. வேதம் கடவுள் உண்மையை வலியுறுத்துவது. அதனாலேயே சநாதன தர்மத்தை வைதிக தருமம் – வைதிக சமயம் – வைதிக மதம் என்றெல்லாம் சுட்டினார்கள்.

இந்துமதம் என்ற பெயரால் இன்று சுட்டப்பெறும் சமய நெறிக்கு உரிய பாரம்பரிய நாமங்கள் சநாதன தருமம், வைதிக தருமம் என்பனவே. இந்துமதம் என்ற பெயர் பிற்காலத்தில், இந்தியநாட்டு மதம் என்ற கருத்தில், மேனாட்டவர்களால் வழங்கப்பட்ட பெயரே. அந்நிலையில் அவைதிக மதங்களை சமண, பௌத்த மதங்களும் இந்துமதம் என்ற வரையறைக்குள் அடக்கிப் பேசப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. உண்மையில் வைதிகப் பிரிவுகள் அனைத்துக்கும் வேதங்கள் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றனவோ அவ்வாறே அவைதிக மதங்களுக்கும் அவ்வேதங்களே அடிப்படையாக அமைகின்றன. முன்னவை வேதங்களை ஒத்துக்கொண்டு தத்தம் வியாக்கியானங்களை முன்வைத்தன; பின்னவை வேதங்களை மறுதலித்துத் தத்தம் வியாக்கியானங்களை முன்வைத்தன. அவ்வகையில் இந்தியாவில் தோன்றிய அனைத்து மதங்களுக்கும் வேதங்கள் அடிப்படையாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதம் என்ற பெயரில் இன்று வழங்கும் வைதிக தருமமானது வேற்றுமையில் ஒற்றுமை காண்பதையே தன் அடிப்படைப் பண்பாகக் கொண்டது. பரந்த பாரத தேசத்தில் பல்வேறு பிராந்தியங்களில் அவ்வப் பிராந்திய தட்பவெப்ப நிலைமைகளுக்கு – புவியியல் அமைப்புக்கு ஏற்ப நிலவிவந்த வழிபாட்டு நடைமுறைகளையெல்லாம் வேத அடிப்படையிலான சநாதன தருமம் தன்னுள் அடக்கிக்கொண்டது. விநாயகர், முருகன், சூரியன், சிவன், விஷ்ணு, சக்தி முதலான எண்ணற்ற பெயர்களில் கடவுளை வழிபடும் மரபுகளையெல்லாம் வைதிக தருமம் ஒன்றாகவே கருதியது. உண்மையில் வைதிக தருமம் ஏகதெய்வக் கொள்கையையே தனது கொள்கையாகக் கொண்டது. ஆனால் அத்தெய்வத்தை இன்ன பெயரால்தான் சுட்ட வேண்டும், இன்ன முறையில்தான் வழிபட வேண்டும் என்ற ஒருவழிப் பாதையை அது உடன்படவில்லை. மனித சிந்தனையின் எல்லைக்குள் அடங்காத பரம்பொருளை தனிமனிதன் ஒருவனால் நிருணயிக்கப்பட்ட ஒரேயொரு வழியில் மாத்திரமே சென்றடையலாம் என்ற கருத்தை வைதிக தருமம் அறிவுக்குப் புறம்பானதாகவே கருதியது.

தமது மார்க்கம் இறைவனால் அருளப்பட்டது என்று கருதுபவர்கள், உலகில் வழங்கும் ஏனைய மார்க்கங்களையும் இறைவனே அருளினான் என்று கொள்வதில் என்ன இடர்பாடு காணமுடியும்? தனக்கு உடன்பாடில்லாத மார்க்கங்களை, எல்லாம் வல்ல இறைவன், ஏன் அழிக்காது விட்டு வைத்துள்ளான்? என்ற கேள்விகளுக்கு என்ன பதில் கூற முடியும்? இந்துமதம், அடிப்படையில் ஏனைய மதங்களையும் ஏற்றுக்கொள்ளும் மதமாகும். "உள்பொருள் ஒன்றே; அறிஞர்கள் அதனைப் பலவாறு அழைப்பர்" என்ற கருத்துப்படும் வாக்கியம் வேதத்திற் காணப்படுகின்றது. வேதநெறி ஏகதெய்வக் கொள்கையை வலியுறுத்துவது என்பதைவிட ஒருமைக் கொள்கையை வலியுறுத்துகின்றது என்று கொள்வதே மிகப் பொருத்தமானது. பரம்பொருள் ஒன்றே; அப்பரம்பொருள் அவன், அவள் என்ற பாகுபாடு கடந்தது. தத், சத், ஏகம் என்ற சொற்களாற் குறிப்பிடப்படுவது.

எல்லை கடந்த அப்பரம்பொருளையே மனிதன், தன் அறிவெல்லைக்கு உட்பட்ட வகையில் கடவுள் என்று சுட்டுகின்றான். அதற்கும் அப்பாற் சென்று அக்கடவுளுக்கு கடவுட் பண்புகளை வெளிப்படுத்துவனவான பல பெயர்களைச் சூட்டி அழைக்கிறான்; வழிபடுகிறான். பரந்த பாரத தேசத்திலே உள்ள மக்கள் அப்பரம்பொருளை பல்வேறு நாமங்களில் பல்வேறு தோற்றங்களில் எல்லைப்படுத்தி தமக்கு உகந்த வகையில் கண்டு வழிபட்டாலும் தாம் வழிபடுவது எல்லைகடந்த பரம்பொருளையே என்ற உண்மையை உணர்ந்தவர்களாகவே விளங்குகின்றனர். மாணிக்கவாசகர் அந்த உண்மையையே,

**"ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லார்க்கு**
**ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ"**

என்ற தம் திருவாசகத்தால் வெளிப்படுத்துகிறார். இந்து சமயத்தின் உட்பிரிவுகளிடையே பற்பல வேறுபாடுகளும் அவற்றால் உண்டான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளும் காணப்பட்ட நிலையிலும் கூட உள்பொருள் பற்றிய இந்தக் கோட்பாட்டுத் தெளிவானது அவற்றையெல்லாம் வேதத்தின் அடிப்படையில் ஒன்றுபடுத்தி நிற்கின்றது. இந்துமதம் தன் உட்பிரிவுகளையெல்லாம் எந்த அடிப்படையில் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமைகண்டு ஒருங்கிணைத்ததோ அதே அடிப்படையில் இந்தியப் பண்பாட்டுக்குப் புறத்தேயிருந்துவந்த சமயங்களையும் உடன்பாடாக நோக்கத்தக்க மனப்பாங்கினை இயல்பாகவே கொண்டுள்ளது. எல்லா மதங்களும் மேலான ஒரு பொருளையே வழிபடுகின்றன. அப்பரம்பொருளுக்குச் சூட்டிய நாமங்களிலும் கடவுள் பற்றிய கோட்பாடுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் வேறுபாடுகள் இருக்கலாம். அவ்வேறுபாடுகள் சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். ஆனால் அம்மதங்கள் யாவும் வழிபடும் தெய்வம் ஒன்றே என்ற தெளிவு இந்துமத சிந்தனையின் அடிப்படையில் மிக இலகுவாக வாய்த்துவிடுகிறது. அதனாலே ஒரு தெளிந்த இந்து எந்த மதத்தையும் உடன்படக் கூடியவனாகிறான்.

இந்து சமயத்தின் வழிபாட்டுப் பிரிவுகள் மாத்திரம் அல்ல, வைதிக அடிப்படையிலான தத்துவ தரிசனங்கள்கூட மிகப் பாரிய வேறுபாடுகளைக் கொண்டவையே. உள்பொருள் ஒன்றே என்ற சங்கர வேதாந்தத்திலிருந்து உள்பொருள் பல என்ற சைவசித்தாந்தம் வரையிலே சிந்தனை வேறுபாடுகள் பல உண்டு. வேத உபநிடத வாக்கியங்களையே அடிப்படையாகக் கொண்ட இத் தத்துவ தரிசனங்கள் பல; ஆனால் அவையாவும் வைதிக தரிசனம் என்ற ஒரு பெயராற் சுட்டப்பெறுகின்றன. அதுபோலவே இந்தியப் பண்பாட்டுக்குப் புறத்தே எழுந்த கடவுட் கோட்பாடுகளும் கடவுளை ஏற்றுக் கொள்வன என்றவகையில் வைதிக தருமமாகவே கொள்ளப்பட்டு இந்துக்களால் மதிக்கவும் போற்றவும்படும்.

இந்துமதத்தின் அடிப்படைக் குணாம்சமே வேற்றுமைகளை ஏற்றுக்கொள்ளும் அதன் தன்மையே. கடவுளுண்மையை ஏற்றுக்கொண்டு அக்கடவுளை வழிபடுவதற்குக் கூறப்பட்ட வழிமுறைகளே உலகில் மதங்களாக நிலவுகின்றன. அம்மதங்கள் யாவும் தாம்தாம் கூறும் வழியே கடவுளை அடைவதற்கான வழி என்றும், ஏனைய வழிகள் யாவும் நரக வழியே என்றும் வலியுறுத்தும் இயல்பின. ஆனால் இந்துமதம் அவ்வாறானது அன்று. அனைத்து மதங்களும் இறைவனை அடைவதற்கான வழிகளே என்பதை இந்துமதம் ஏற்றுக் கொள்கின்றது. காரணம் இந்துமத உட்பிரிவு யாவுமே தம்மளவிலேயே பல்வேறு மார்க்கங்களை இறைவனை அடைவதற்கான உபாயங்களாக ஏற்றுக்கொள்கின்றன. உதாரணமாக சைவ நெறியானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களை, இறைவனை அடைவதற்கான மார்க்கங்களாகக் கொள்கின்றது. அவை மேலும், சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றவாறாகப் பலவாக விரிவுபடும். அத்தனை மார்க்கமும் இறைவனை அடைவதற்கு ஏற்ற மார்க்கங்களே என்பது இந்து தருமம். இவ்வாறு பல்வேறு மார்க்கங்களை ஏற்றுக் கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பக்குவம் பல்வேறு மதங்களையும் ஏற்றுக் கொள்கின்ற பக்குவத்தை ஒரு உண்மை இந்துவுக்கு வழங்குகின்றது. வேத உபநிடதங்களே, "ஆறுகள் பல; அவை யாவும் ஒரே சமுத்திரத்தில் சங்கமம் ஆகின்றன" என்ற பரந்த நோக்கினை விதைத்திருந்தன. அதனையே,

**"வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்**
**விளங்கு பரம்பொருளே, நின் விளையாட்டு அல்லால்**
**மாறுபடும் கருத்தில்லைஞூ முடிவில், மோன**
**வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா"**

என்கிறார் தாயுமானவர். உலகிலே எத்தனை மதங்கள் நிலவுகின்றன என்ற வினாவுக்கு விடையளித்த இராமகிருஷ்ண பரமஹம்சர், "உலகில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை மதங்கள் உள்ளன" என்றார். ஒரு மதத்தைப் பின்பற்றும் மக்களாக இருப்பினும், அம்மக்கள் ஒவ்வொருவரும் தம் மதம் கூறும் கருத்துக்களை உணர்ந்தவராகவே இருப்பினும், நடைமுறையில் தம்மை அறிந்தும் அறியாமலும் தனித்துவமான சில எண்ணங்களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டவர்களாக, ஒருவரிலிருந்து மற்றவர் மிக நுண்ணியதாகவேனும் வேறுபட்டவர்களாகவே விளங்குவர். அந்நிலையில் ஒவ்வொருவரும் மிகச் சிறிய அளவிலேனும் வேறுபட்ட ஒரு மதத்தவராகவே கொள்ளத்தக்கவர்கள் ஆகிறார்கள். இவ்வாறான சிந்தனை மிகவும் பரந்த நோக்கின் அடிப்படையிலேயே எழத்தக்கது. இந்துவாக இருப்பவர்களுக்கு அந்த நோக்கு இயல்பிலேயே சாத்தியப்படும்.

இந்துமத அடிப்படையிலே உருவான உன்னதமான ஞானியரும் சித்தர்களும் அனைத்து மதங்களையும் சமமாக நோக்குகின்ற தன்மை உடையவர்களாக விளங்குகின்றனர். இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள், முதலானவர்கள் இந்துமதத்திற் காணப்படும் இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு உதாரண புருஷர்களாக – கண்கண்ட சான்றுகளாகக் கொள்ளத்தக்கவர்கள். சிக்காக்கோ நகரிலே கூடிய சர்வசமய மாநாட்டிலே சுவாமி விவேகானந்தர் அனைத்துச் சமயத்தவர்களையும் "சகோதர சகோதரிகளே" என்று விளித்தமை அங்கு கூடியிருந்தவர்களை ஆச்சரியப்பட்ட வைத்தது, ஆகர்சித்தது. ஏனெனில் அங்கு கூடியிருந்தவர்கள் பிற மதத்தவர்களை அஞ்ஞானிகள் என்றும் (ஆஸ்திகர்களாயினும் கூட) இறைமறுப்பாளர்கள் என்றும் பழித்துரைக்கும் மதங்களைப் பின்பற்றுபவர்கள். ஆனால் சாதாரண இந்து ஒருவனுக்கு இது ஆச்சரியத்துக்கு உரிய விடயமல்ல; அவனுக்கு இயல்பானதொரு விடயமே. இந்துமதம், கடவுள் நம்பிக்கையுடைய வேற்றுமதத்தவரை அப்பாலும் அடிசார்ந்தவராகவே மதிக்கிறது. இந்துமதத்துக்கு இயல்பான இந்த அம்சம் குறித்து காந்தியடிகள் இவ்வாறு பெருமிதம் கொண்டார். "எனது இந்துமதமானது குறுகிய கோட்பாடுகளை உடையதன்று. அது இஸ்லாத்திலும், கிறிஸ்துவத்திலும் பௌத்தத்திலும் மற்றும் சோராஸ்திரியத்திலும் உள்ள நல்ல நெறிகளையெல்லாம் தன்னகத்தே கொண்டதாகும். உண்மையே எனது மதம். அஹிம்சையே அதை அறியக்கூடிய ஒரே வழியாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியடிகள் தமது பிரார்த்தனை வேளைகளில் பாடுவதற்கு விரும்பித் தேர்ந்துகொண்ட பாடல், இந்துமதம் எவ்வளவுதூரம் ஒருமை உணர்வு பெற்று விளங்குகின்றது என்பதற்கு நல்ல சான்றாகும். அப்பாடல், சிவன் என்றும் இராமன் என்றும் அல்லா என்றும் எவ்வாறெல்லாம் அழைத்தாலும், அவ்வப் பெயர்களால் அழைக்கப்படுபவர் ஒரே கடவுள்தான் என்ற தெளிவினைத் தருவதாக விளங்குகின்றது.

**"ரகுபதி ராகவ ராஜாராம்**
**பதீத பாவன சீதா ராம்**
**ஈஸ்வர அல்லா தேரேநாம்**
**சபகோ சன்மதி தேபகவான்"**

கோலங்களிலே மனதைப் பறிகொடுத்துப் பாடிய அருளாளர்களும் இந்து சமயத்தவரே.

**"நட்டகல்லைத் தெய்வம் என்று நாலுபுஸ்பம் சாத்தியே**
**சுற்றிவந்து முணுமுணென்று சொல்லுமந்திரம் ஏனடா**
**நட்டகல்லுப் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்"**

என்று உருவ வணக்கத்தை ஏளனம் செய்யும் சித்தரும் இந்துசமயத்தவரே. இறைவழிபாட்டுக்காக ஆயிரக்கணக்கிலே செலவழிப்பவனும் இந்துவாக இருக்கலாம். எந்த ஆடம்பரமும் இன்றி உள்ளமே கோயிலாக வழிபடும் ஞானியரும் இந்துவாக இருக்கலாம். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று கொள்பவரும் மதிப்பார்ந்த இந்துவாகலாம். இறைவனை வழிபடுவது பற்றிய எண்ணமே இல்லாது தன் கடமைகளில் மாத்திரம் மிகச் செம்மையாகக் கருத்துச் செலுத்தும் கருமயோகியும் இந்துசமயத்தைப் பொறுத்தவரையிலே இறைவனுக்கு மிக உகப்பானவனே. இன்னும் சொல்வதானால், நாஸ்திகன்கூட நீதி நியாயத்துக்குப் பயந்து நடப்பவனாகில் அவனும் மதிப்பார்ந்தவனே. இறைவனை வழிபடுவது மட்டும்தான் வழிபாடு அல்ல; தருமத்திலிருந்து விலகாது நடப்பதும் வழிபாடே.

**"அறத்திற் திரியாப் படர்ச்சி வழிபாடே"**

இவ்வாறெல்லாம் நோக்குகின்றபோது உலகில் வழங்கும் எந்தெந்த மதத்தைச் சார்ந்தவரும் இந்துவாகக் கொள்ளத்தக்கவரே. அவர் ஏகதெய்வக் கொள்கை உடையவராக இருக்கலாம். பலதெய்வக் கொள்கை உடையவராக இருக்கலாம். உருவ வழிபாட்டை உடன்படுபவராக இருக்கலாம்; வெறுப்பவராக இருக்கலாம்.

அதுபோலவே இந்துவாகப் பிறந்த எவனும் தான் எத்தகைய கோட்பாட்டை மதிக்கிறானோ அந்தக் கோட்பாட்டை இந்துவாகவிருந்தே பின்பற்றமுடியும். உதாரணமாக விக்கிரக வழிபாட்டைப் பின்பற்றிய ஒருவன் கால கதியில் அதிலே நம்பிக்கை இழப்பானாக இருப்பின் அதை விட்டுவிடுவதில் அல்லது கடுமையாக எதிர்ப்பதிற்கூட எந்தத் தடையும் இல்லை. அவனவன் தன்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளப்பக்குவத்துக்கேற்ற வழிமுறைகளைப் பின்பற்றி இறைவனை வழிபடவும் நீதியான வகையில் வாழ்க்கையைக் கொண்டு நடத்தவும் முடியும். உண்மையில் நீதியான வாழ்க்கையே பிரதானமானது. இறைவழிபாடு கூட இரண்டாம் பட்சமானதே.

**"செய்யும் தொழிலே தெய்வம்"**

"மனித நாகரிகத்தின் வரலாறு என்பது தீமையைப் புறங்கண்டு நன்மையை வளர்க்கும் முயற்சியே" என்பர். சமயத்தின் நோக்கமும் அதுவாகவே இருக்க முடியும். இறைவனை வழிபடுவதைவிட இல்லாதவர்களுக்கு உதவுவது மேலானதே. "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு." இறைவனுக்குச் செய்வது எதுவும் மக்களுக்குச் செய்வதாகாது. ஆனால் மக்களுக்குச் செய்தவை யாவும் இறைவனுக்குச் செய்தவையாகும்.

**"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்**
**படமாடக் கோயில் பகவர்க்க தாமே"**

இந்து சமயத்தைப் பொறுத்தவரை அது கடவுள், ஆன்மா, பிரபஞ்சம், வாழ்க்கை இலட்சியம் என்பன பற்றிய எண்ணற்ற விசாரங்களுக்கு இடமளிப்பதாகும்; மாற்றங்களையும் புதுவரவுகளையும் ஏற்றுக் கொள்வதாகும். அது எப்போதும் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப தன்னைத்தான் சீர்திருத்தியே வந்துள்ளது. உலகியல் வாழ்வுக்கும் ஆன்மிக ஈடேற்றத்துக்கும் ஏககாலத்தில் வழிகாட்டும் சாதனமாக அது திகழ்கின்றது. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்றும் "அன்பே சிவம்" என்றும் பேசும் மதமாக அது விளங்குகின்றது. "குறைவிலாது உயிர்கள் வாழ்க", "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே" என்றவாறான உலக நோக்கு அதற்கு உண்டு. "உலகின் செல்வங்கள் அனைத்தையும் விடப் பெறுமதி மிக்கவன் மனிதனே" என்றார் சுவாமி விவேகானந்தர். அவ்வகையிலே மதத்தை விடவும் மானிடம் பெரியதே. மதத்திற்காக இடம்பெறும் சண்டைகள் அறியாமையின் விளைச்சல்களே.

அந்த உண்மையை விளங்கிக் கொண்டதாலேயே நவீன காலத்திலே இந்துமதத்தின் அடிப்படையிலே தோன்றிய சமய நிறுவனங்கள் பலவும் சமய சமரசத்தையே தமது அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டமைந்தன. இராமகிருஷ்ண மிஷன், சத்தியசாயி சமித்தி, பிரம்மகுமாரிகள் அமைப்பு முதலானவை உதாரணங்களாகக் கொள்ளத்தக்கன. சாயி சமித்தியின் இலச்சினையிலே சர்வ சமய சின்னங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசமய சமரசம் என்பது இந்து மதத்தைப் பொறுத்த வரையில் உயர்நிலையிலுள்ள ஞானியர்க்கு மட்டுமே வாய்ந்தவொரு உணர்வு என்பதற்கில்லை. அடிப்படைக் கல்வியறிவுதானும் இல்லாத சாதாரண மனிதர்களான இந்துக்களிடமும் அந்த உணர்வினைக் கண்டு கொள்ளலாம். இந்து ஒருவனுக்கு உரித்துடைய பொழுதுப்போக்குவரத்துப் பேருந்திலோ, சகல சமூகத்தவரும் கூடும் கடையிலோ, சிகையலங்கார நிலையத்திலோகூட சகல சமயத்தவரும் பின்பற்றும் கடவுளரது அல்லது இறைதூதர்களது படங்களை சமரசமாக மாட்டியிருப்பதை நாம் கண்டு கொள்ளலாம். இஸ்லாமியர் உருவ வணக்கத்துக்கு உடன்பாடானவர்கள் அல்ல என்பதை உணர்ந்தவர்களாய் அதை ஈடு செய்யத்தக்கவகையில் திருமக்காவின் படமேனும் அங்கே மாட்டப்பட்டிருக்கும். சகல சமயத்தவரையும் சமநிலையில் அங்கீகரிக்கும் இப்போக்கு சாதாரண மக்களிடையேயும் காணப்படுகின்றமை உலகளாவிய நிலையில் சகோதரத்துவத்தையும் சௌயன்னியத்தையும் வளர்க்கவல்லதாகும். அந்தவகையில் உலக அமைதியை உருவாக்கவல்ல ஆற்றல் இந்துமதத்துக்கு உண்டு.

சமயம் என்பது பக்குவப்படுத்துவது (சமைதல் – பக்குவப்படுதல்). மக்களைப் பக்குவப்படுத்தும் சாதனமே சமயம். பிறர்மனம் நோகாதபடி, பிறருடைய சுதந்திரத்திலே தலையிடாது, மற்றவர் மனங்களைப் புரிந்து நடப்பதைவிடப் பக்குவமான செயற்பாடு வேறு எது? உண்மைச் சமயம் என்பது சமயப்பொறையோடு கூடிய சமயமே. எல்லாச் சமயங்களும் ஒரே உண்மையைத்தான் வலியுறுத்துகின்றன. சமய அடிப்படை வாதிகளிடத்திலேயே முரண்பாடுகள் முளைவிடுகின்றன. அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டியது ஆட்சியாளர் கடமை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் திருமணம் பற்றிய ஓர் அறிமுகம்

**செல்வகுமாரி சிவலிங்கம், விரிவுரையாளர், இந்துநாகரிகப் பிரிவு மொழித்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.**

திருமணம் என்பது 'ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காக சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்ட வினைமுறையாகும்'. பக்தவத்சலபாரதி திருமணம் என்பதனை 'மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணம்' என குறிப்பிடுகின்றார். இந்துக்களைப் பொறுத்தவரையில் இத்திருமணமானது பல வகைப்படுகின்றது. அவை, சங்கல்பம், சமஸ்பரிசம், மைதுனம், துவந்தம். சங்கல்பம் என்பனவாகும். சங்கல்பம் என்பது பரிபூரண கலப்புத் திருமணமாகும். அதாவது, இஷ்டப்பட்டவர்கள் கூடி வாழ்தலாகும். சமஸ்பரிசு என்பது வெவ்வேறு கோத்திரத்தில் திருமணம் செய்வதாகும். மைதுனம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் தமக்குள் விருப்பம் உள்ள வரை கூடி வாழ்கின்ற நிலையாகும். துவந்தம் என்பது ஒருதார விவாகத்தினால் ஏற்படும் சோடி திருமணமாகும்.

மனுதர்ம சாஸ்திரத்தில் கூறப்படும் திருமண முறைகளாக பிரம விவாகம், தெய்வ விவாகம், ஆசுர விவாகம், காந்தருவ விவாகம், இராட்சத விவாகம், பைசாச விவாகம் என்பன உள்ளன. இங்கு பிரம விவாகம், ஆருஷ விவாகம், பிரஜாபதி விவாகம் என்பன பிராமணருக்குரிய விவாகங்கள் என்றும், ஆசுர விவாகம், காந்தருவ விவாகம், பைசாச விவாகம் என்பன சத்திரியருக்குரிய விவாகங்கள் என்றும், ஆசுர விவாகம், காந்தருவ விவாகம், பைசாச விவாகம் என்பன வைசிகருக்குரிய விவாகங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. அர்த்த சாஸ்திரம் கூறும் ஆறு வகையான திருமணங்களாக பிரமமணம், கோடல் ஆலிடம், வேட்பிப் போனுக்கீதம், காந்தருவம், இராக்கதம், பைசாசம் என்பன உள்ளன.

திருமணத்திற்குரிய வயதெல்லைப் பற்றி நோக்கின், மனுதர்மசாஸ்திரமானது முப்பது வயதுடைய ஆண், பன்னிரண்டு வயதினையுடையப் பெண்ணையும் இருபத்து நான்கு வயதினையுடைய ஆண், எட்டு வயதினையுடையப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறது. அர்த்த சாஸ்திரமானது பதினாறு வயதினையுடைய ஆண் பன்னிரண்டு வயதினையுடையப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறது. இந்துத் திருமணச் சட்ட விதியானது இருபத்தொரு வயதினையுடைய ஆண் பத்தொன்பது வயதினையுடையப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் எனக் கூறுகின்றது. மேலும், இந்துத் திருமணச் சட்டமானது ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் நடைபெறுகின்ற வேளை, வேறொரு வாழக்கைத் துணையை வைத்திருக்கக் கூடாது என்று இரு தரப்பினரும் திருமணத்திற்கு இசைவு தரும் மன நிலையில் காணப்பட வேண்டுமென்றும் கூறுகின்றது. அத்துடன், தடுக்கப்பட்ட உறவுமுறையில் பிணைக்கப்பட்டவராக இருக்கக் கூடாது என்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து திருமணத்தில் கிரியைகள் இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றன. கிரியைகளானவை உயிர்கள் இவ்வுலகில் நல்வாழ்வு வாழ்வதற்காகவும் மறுமையில் நற்பேறு எய்துவதற்காகவும் செய்யப்படுகின்றன. இவை, ஆன்மார்த்தக் கிரியை, பரார்த்தக் கிரியை என இருவகைப்படுகின்றன. ஆன்மார்த்தக் கிரியையானது பூர்வக் கிரியை, அபரக் கிரியை என்றும், பரார்த்தக் கிரியையானது நித்தியக் கிரியை, நைமித்தியக் கிரியை, காமியக் கிரியை என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. (ஒருவன் தன் சுய நன்மையின் பொருட்டு செய்து கொள்வது ஆன்மார்த்தக் கிரியை, உலக நன்மையின் பொருட்டு செய்து கொள்வது பரார்த்தக் கிரியை). தாயின் வயிற்றில் கரு உற்பத்தியாகிய நாள் முதல் அவ்வுயிர் உடலை விட்டு நீங்கும் வரை செய்யப்படும் கிரியை பூர்வக் கிரியையாகும். உயிர் உடலை விட்டு நீங்கியப் பின் அவ்வுயிரின் நன்மைக்காக செய்யப்படும் கிரியை அபரக் கிரியையாகும்.

பூர்வக் கிரியையில் நாமகரணம் (பெயரிடல்), வித்தியாரம்பம் (ஏடுதொடக்குதல்), சைவ அநுட்டானங்கள், பூப்புனித நீராட்டு விழா, திருமணக் கிரியை என்பன குறிப்பிடத்தக்கன. இக்கிரியைகளுள் திருமணக் கிரியையானது தனித்துவமான இடத்தினை வகிக்கின்றது.

இந்துக்கள் புரோகிதர் முன்னிலையில் அக்கினியைச் சாட்சியாகக் கொண்டு செய்யும் திருமணத்தில், சாதகம் பார்த்தல், மணம் பேசுதல், மணமகனை வரவேற்றல், நீர்வார்த்தல், நிறை குடம் வைத்தல், நிச்சயம் செய்தல், பொன்னுருக்கல், கன்னிக்கால் ஊன்றல், இரட்ஷாபந்தனம், முளைப்பாலிகைப் போடல், பந்தல் அமைத்தல், மணமகன் அழைப்பு, பலகாரத்தட்டம், கூறைத்தட்டம், பெண் புறப்படுதல், மாப்பிள்ளை அழைப்பு, அரசாணிக்கால், அங்குரார்ப்பணம், அக்கினி வார்த்தல், கன்னிகாதானம், தாலிகட்டுதல், மாலை மாற்றுதல், பால் பழம் கொடுத்தல், ஏழடி நடத்தல், அம்மிமிதித்தல், கணையாழி எடுத்தல், அருந்ததிப் பார்த்தல், ஆசிர்வாதம், ஆரத்தி, பூதாக்கலம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்து திருமணக்கிரியைகள் ஒவ்வொன்றும் பல நோக்கங்கள் கருதிச் செய்யப்பட்டன. ஆனால், இன்று அவற்றின் அர்த்தத்தினை அறியாது பொருளற்ற வகையில் திருமணக் கிரியைகளை செய்து வருகின்றனர். சில கிரியைகள் முற்றாக அருகிவிட்டன என்றே கூறலாம். உதாரணம், கோதரிசனம் (பசுவணக்கம்), அருந்ததி பார்த்தல் என்பன.

இந்து திருமணக்கிரியையில் தீவலம் வருதல் என்பது முக்கியமான ஒரு நிகழ்வாகும். இக்கருத்தினை;

**'மாமுது பார்ப்பன மறை வழி காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்பார்கள்'**

என சிலப்பதிகாரம் கண்ணகி ,கோவலன் திருமணக் காட்சியினைக் கூறுவதனூடாக அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேள வாத்தியங்களும் இந்துத் திருமணக்கிரியையில் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனை;

'**மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமநி ரைதாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பிம துசூதன் வந்து என்னைக்**
**கைத்தலம் பற்றக்க னாக்கண்டேன் தோழி**'

என நாச்சியார் திருமொழியில் கூறுவதனூடாக அறிந்துகொள்ளலாம்.

இந்து திருமண நிகழ்வில் ஓமாக்கினி, தருப்பை, வேத மந்திரம் , தாரை வார்த்தல், தீவலம் வருதல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக, திருமண நிகழ்வுகள் வேத விதிப்படி நடைபெற வேண்டும் என்பதனை வசிட்ட முனிவர் வேத விதிப்படி நிகழ்த்தி வைத்த திருமணம் பற்றி இராமாயணம் கூறுவதனூடாக அறிந்து கொள்ளலாம். இந்து திருமணத்தில் ஜாதகம் பார்த்தல், நிச்சயம் செய்தல் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன. திருமணத்தின் போது மணமகன், மணமகள் ஆகியோருக்கிடையே பொருத்தங்கள் காணப்படுகின்றதா என்பதனை அறிவதற்காக ஜாதகம் பார்க்கப்படுகின்றது. ஜாதகம் பொருத்தமாக அமைகின்ற பட்சத்திலே இரு வீட்டாரும் நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். நிச்சயம் செய்வதற்குத் தேவையான பொருட்களாக தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, மலர்கள், மோதிரம் என்பன உள்ளன. 'உலகெலாம்' என்ற பொதுப் பிரார்த்தனையுடன் நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். பின்னொரு நாள் குறித்துப் பரிசம் போடுவார்கள், பின் பத்திரிகைகள் பிரசுரித்து சுபநாள் ஒன்றில் திருமணத்தை நிகழ்த்துவர். திருமண நிகழ்வானது பந்தல் போட்டு நான்கு கம்பங்களில் வாழைமரம், மாவிலை, தோரணம் கட்டி மலர்களால் அலங்கரித்து மணமக்களுக்குப் புத்தாடை அணிவித்து பெரியவர்கள் சிவப்பிரார்த்தனை செய்ய மணமகன், மணமகள் கழுத்தில் பூமாலைப் போட திருமணம் நடைபெறும். அப்போது மலர்கள், அரிசி என்பவற்றினைத் தூவி மணமக்களை சபையோர் ஆசிர்வதிப்பர்.

தாலி கட்டுதல் என்பது இந்து திருமணத்தில் ஒரு முக்கிய நிகழ்வாகும். மாங்கல்யத்தின் முக்கியத்துவத்தினை;

'**மாங்கல்யம் தந்து நா அநேன மமஜீவன ஹேதுநா**
**கண்டே பத்தாமி சுபகேத்வம் ஜீவசரதச்சதம்**'

என்ற சுலோகத்தினூடாக அறிந்து கொள்ளலாம். ஆனால், தாலி கட்டும் வழக்கமானது இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகும் என்றும் அறியப்படுகின்றது. இக்கருத்தினை 'இடைக்கால இந்துத் திருமண முறையில் கலசம் வைத்தல், விளக்கு வைத்தல், அம்மி வைத்தல், அரசாணிக்கால் நடுதல், நவதானியங்கள் வைத்தல், பொங்கல் வைத்தல், எக்கியம் வளர்த்தல், திரை காட்டித் தாலிகட்டல், தாரை வார்த்தல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், முதலியன இடம் பெற்றன' எனக் கூறுவதிலிருந்து அறிந்துக் கொள்ளலாம். திருமணங்களின் போது தாலி அணிவிக்கும் நிகழ்வினைக் கூறும் முதல் நூல் கந்தபுராணமாகும். திருவிளையாடற் புராணம், திருப்பேரூர்ப் புராணம் என்பனவற்றிலும் தாலி பற்றிக் கூறப்பட்டுள்ளது. தாலியினை மஞ்சள் கயிற்றில் கோர்த்து அணிவிக்க வேண்டும். ஏனெனில், மஞ்சள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிற்றில் தாலி கட்டும் போது மூன்று முடிச்சு போடுவார்கள் அதற்கு மூன்று அர்த்தங்கள் உள்ளன. (மூன்று முடிச்சு போடுவதற்கான அர்த்தம் பெண்ணானவள் கடவுள், பெற்றோர், கணவன் ஆகியோருக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்பதாகும்). ஆனால், இன்று தாலியினைத் தங்கக் கொடியில் கோர்த்து அணிந்து கொள்கிறார்கள். இந்து திருமணக் கிரியையில் தீவலம் வருதல் என்பது முக்கியமான நிகழ்வாகும். தீ வலம் வருகையில், மணமகன் மணமகளை ஏழடி எடுத்து வைக்கச் செய்ய வேண்டும். இதனை சப்தபதி என்பர். ஒவ்வொரு அடியும் பின்வரும் நோக்கங்களுக்காக எடுத்துவைக்கப்படுகின்றது.

**முதலாவது அடி தான்யலட்சுமியைப் பெறுதல்,**

**இரண்டாவது அடி உடல் வலிமை பெறல்,**

**மூன்றாவது அடி விரதங்களை அனுஷ்டிப்பதற்கான சக்தியினைப் பெறல்.**

**நான்காவது அடி நல்ல சுகம் பெறல்.**

**ஐந்தாவது அடி பசு வளம் பெறல்.**

**ஆறாவது அடி பருவங்களின் அனுகூலம் பெறல்.**

**ஏழாவது அடி ஹோமங்கள் குறைவின்றி நடைபெறல்.**

ஆனால், இவை தற்காலத்தில் எவ்வித அர்த்தமும் இல்லாமல் செய்யப்படுகின்றன. எனவே, ஏழடி வைக்கும் போது மேற்கூறப்பட்ட அம்சங்களை மனதிலிருத்தி அவை தம் வாழ்வில் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்தவாறு சப்தபதி நிகழ்வினை மேற்கொள்ள வேண்டும். ஆனால், பலர் அதன் அர்த்தம் தெரியாமலே அந்நிகழ்வினை செய்துவருகின்றனர்

அதாவது, இன்று இந்துத் திருமணக் கிரியைகள் நிறைவான மாற்றங்களுக்குட்பட்ட வகையிலே நடைபெற்றுவருகின்றன. குறிப்பாக, இந்து திருமணக்கிரியையில் இடம் பெறும் கோதரிசனம் என்பது முற்றாக அருகிவிட்ட ஒரு அம்சமாகவே காணப்படுகின்றது. தாலி கட்டல், மற்றும் ஏழடி நடத்தல் போன்ற அம்சங்களிலும் நிறைவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்து திருமணக்கிரியைகளின் தத்துவார்த்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காது பணம், கௌரவம், ஆடம்பரம் இவற்றிற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். கிரியைகளை நிகழ்த்தும் சிவாச்சாரியர்களிடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. (பிரதேச அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன). பிற மதத்தவர்கள் பின்பற்றுகின்ற முறைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. நேரம், புகைப்படம், வீடியோ போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக கிரியைகளைச் சுருக்கமாக செய்துவிடுகின்றனர். ஆலய திருமண மண்டபங்களைக் காட்டிலும் பொதுவான திருமண மண்டபங்களிலே அதிகமான திருமணங்கள் நடைபெறுகின்றன.

அதாவது, நாகரிக வளர்ச்சி, வெளிநாட்டவர் வருகை, காதல் திருமணம், கலப்புத் திருமணம், மூல நூல்களில் கூறப்பட்ட விடயங்களில் தெளிவின்னைம, உழைப்பு, சிவாச்சாரியர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் போன்ற காரணங்களினால் இன்று இந்துத் திருமண நிகழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மத சம்பிரதாயங்கள்

**க. தக்ஷாழினி, மூன்றாம் வருடம், பொருளியல்**
**விஷேடகற்கை இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்**

இந்து தர்மத்தில் பல சாஸ்திர சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன. இன்றைய பெரும்பாலான இளைய சமூகம் அதனை வெறும் மூடநம்பிக்கைகளாகவே கருதுகின்றனர். ஏன் எதற்காக செய்கின்றோம் என்பதனை ஆராய தவறிவிடுகின்றனர். மூடநம்பிக்கைகளாக கருதப்படும் அனைத்து விடயங்களுக்கும் விஞ்ஞான ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் சிறப்பான காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு நாம் காண்போம்.

❖ **படுக்கையை விட்டு எழும்போது ஜெபம் சொல்லி எழவேண்டும்.**

விழித்தவுடன் இரு கைகளையும் மலர விரித்து
**'கராக்ரே வசதே லக்ஷ்மி:**
**கரமத்யே சரஸ்வதி,**
**கரமூலே து கோவிந்த:**
**ப்ரபாதே கரதர்ஷணம்'**

என்கின்ற மந்திரத்தை சொல்ல வேண்டும். தூக்கம் நீடித்திருக்கும் போது மனிதனின் இரத்ததோட்டத்திற்காக இருதயம் மிக குறைவான சக்தியையே பயன்படுத்துகிறது. திடீரென எழுந்து செல்லும் போது இருதயம் மிக கடினமாக செயல்படவேண்டிய நிலை உருவாகின்றது. அதனால், படுக்கையை விட்டு எழும்பியிருந்து சிறிது நேரம் மந்திரங்கள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். இது விஞ்ஞான ரீதியானது. தத்துவ ரீதியாக, எல்லாம் நமது கையிலே உள்ளது. நல்லதோ கெட்டதோ நாம் செய்கின்ற செயல்களில் தான் உள்ளது. ஆகவே, எழுந்ததும் கைகளை பார்த்து நமக்குள் நமது செயல்களை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

❖ **காலையில் சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும்**

தொன்றுதொட்டே இந்து மக்கள் பின்பற்றி வந்த ஓர் ஆசார முறை சூரிய நமஸ்காரம். உடல் மற்றும் மனம் உறுதியடையவும் அமைதியடையவும் உதவும். இதை விதிமுறைகள் படி செய்யும் போது உடற்பாகங்களில் ஆற்றலும் சக்தியும் வருகின்றன. நமது உடலில் உள்ள எல்லா மூட்டுகளுக்கும் அசைவு ஏற்படுகின்றது. சருமத்தில் விற்றமின் D உற்பத்தி செய்யும் திறன் சூரிய ஒளிக்கதிர்களுக்கு உண்டு. கல்சிய உற்பத்தியை கட்டுப்படுத்தும் திறனும் உண்டு. உடல் உறுப்புகள் உறுதி பெறுவதால் காச நோய் அணுக்களின் ஆக்கிரமிப்பையும் தடுக்கின்றது. இவற்றை அறிவியல் துறை அங்கிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **திலகம் இடுதல் வேண்டும்**

திலகம் இடுவது ஆத்மீக முன்னேற்றத்தின் சின்னம் என்பது பொதுக்கருத்து. குங்குமம், சந்தனம், திருநீறு என்பவை பொதுவாக திலகமிட பயன்படுகின்றது. மனித உடலின் ஐந்தாவது திறன் மையமான நெற்றியின் மத்தியிலே பொட்டு வைப்பது வழக்கம். இம்மையத்தில் குங்குமம் அணியும் போது சூரியனின் கதிர்களில் அடங்கியிருக்கும் மருத்துவ குணங்களை உறிஞ்சி எடுத்து மூலைக்குள் செலுத்திவிடுகின்றது. பிரம முகூர்த்தத்தில் சந்தனமும், விடியற்காலையில் குங்குமமும், மாலைப்பொழுதில் திருநீறும், அணிவது நரம்புறுதிக்கும் நோய் நிவாரணத்திற்கும் உத்தமம் என்று சூரிய ஒளியையும் மனித உடலையும் சம்பந்தப்படுத்தி செய்யப்படும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

❖ **திருநீறு அணிதல் வேண்டும்**

திருநீறில் மருத்துவ குணங்கள் நிறைந்து இருக்கின்றன. திருநீற்றை நனைத்தும் நனைக்காமலும் அணிவது உண்டு. திருநீறு அணிந்தால் உடலில் துர்நீரை உறிஞ்சி எடுப்பதற்கும், உடல் வெப்பத்தை குறைப்பதற்கும் உடல் நிலையை மேன்மையடைய செய்வதற்கும் வாய்ப்புண்டு என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. வெண்ணீறானது எமது உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதனையும் மனித வாழ்க்கை நிலையில்லாதது (இறந்த உடலை தகனம் செய்ததும் சாம்பல் ஆகிறது) என்பதனையும் வெளிக்காட்டுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதம் கூறும் இறப்பிற்கு பின் மனிதனின் பாவபுண்ணிய விளைவுகள்

**நடராசா பிரியதர்சினி, மூன்றாம் வருடம், பொருளியல்**
**விஷேடகற்கை இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்**

ஒருவர் மரணமடைந்து ஓராண்டு முடியுந்தருவாயில் அந்த ஜீவன், பிண்டத்திலான உடலை விட்டு எமலோகத்துக்குச் சென்றடையும். ஆனால், எமலோகத்துக்கு அந்த பிண்டத்திலான உடல் செல்லாது. அந்தப் பிண்ட சரீரம் எமபுரியை அடையும் முன்பு ஒரு கட்டை விரல் அளவுள்ள ஒரு புதிய வடிவம் பெற்று, ஒரு வன்னி மரத்தில் சில காலம் தங்கியிருக்கும். அச்சமயம் அதற்கு கர்மத்தாவாகிய புது சரீரம் உண்டாகும். அதன்பின் எமதூதர்கள் அந்த ஜீவனை சித்திரகுப்தன் வசிக்கும் பட்டினத்தின் வழியாக எமலோகத்துக்கு அழைத்துச் செல்வர்.

அந்த ஜீவன் புண்ணியம் செய்ததாக இருந்தால் எமலோகம் அழகிய பட்டணமாகக் காட்சிதரும். பூலோகத்தில் இறந்தவனைக் குறித்து இரும்பாலாகிய ஊன்றுகோல், உப்பு, பருத்தி, எள்ளோடு பாத்திரம் ஆகிய பொருட்களைத் தானம் செய்திருந்தால், அந்த ஜீவன் எமலோகத்தை நெருங்கியவுடன், அங்கு வாசலிலுள்ள பூதகணங்கள் அவர்களைக் கண்டு மகிழ்ந்து காலந் தாமதிக்காமல் அந்த ஜீவன் வந்திருப்பதை எமதர்மனிடம் சென்று தெரிவிப்பர். எமலோகத்தில் எமதர்மனின் அருகிலேயே தர்மத்துவஜன் என்பவன் சதா காலம் இருப்பான். அவன்தான் வந்தஜீவன் புண்ணியம் செய்தவனா! பாவம் செய்தவனா! என்பதைத் தெரிவிப்பவன்.

பூமியில் ஒருவர் வாழ்ந்திருந்தபோது தானதருமங்கள் செய்திருந்தாலோ இறந்தபின் அவருக்காக அவரது உறவினர்கள் தானதருமங்கள் செய்திருந்தாலோ அந்த ஜீவனுக்கு எமலோகத்தில் மதிப்பும் நல்ல வரவேற்பும் இருக்கும். பாவம் செய்தவர்கள் எமலோகத்தைக் கண்டாலே நடுங்குவர். அவர்களுக்கு அது பயங்கரமாகத் தோற்றமளிக்கும். அவர்களுக்கு எமதூதர்களும் எமதர்மராஜனும் கூடப் பயங்கரமானவர்களாக, கொடூரமானவர்களாகத் தோன்றுவர். அவர்களைக் கண்டு பயத்தால் கத்தி ஓலமிடுவர்.

ஒரு ஜீவன் செய்த பாவபுண்ணியங்களின் அளவுக்கேற்ப வேறு ஜென்மம் உண்டாகும். பெருமளவு புண்ணியம் செய்திருந்தவரை எமதூதர்கள் துன்புறுத்தாமல் எமதர்மராஜனின் முன்பு சென்றதும், தேவர்களுள் ஒருவராக உருமாறித் தேவலோகம் செல்வர். அப்படியின்றி அந்த ஜீவன் பாவச் செயல் புரிந்ததாக இருந்தால், எமதர்மராஜனின் கட்டளைப்படி நரகத்தில் ஆழ்ந்து, பிறகு கிருமி, புழு முதலான பிறவியை அடைவர். அவர் மானிடப்பிறவி அடைவது அரிது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தாம் வாழும் காலத்தில் பல்வேறு துறைகளில் பிரசித்தி பெற்றுத் திகழ்ந்திருக்கலாம். ஆனால், அவர்கள் இறந்த பிறகு அவரது உடலில் அரைஞாண்கயிறையும் விடாது அறுத்தெறிந்து விடுவர். அவரது உடலை மண்ணில் புதைத்தோ தகனம் செய்தோ அழித்து விடுவர். இதுதான் மானிடப்பிறவியின் உண்மைத்தன்மை. அப்படி எடுத்த மானிடப்பிறவியில் ஜீவன் பாவச் செயல்களை விடுத்து புண்ணியங்களைச் செய்து இறைபக்தியுடன் ஒழுக்கத்தில் சிறந்திருந்து முத்திபெற முயற்சிக்கவேண்டும்.

## சில மணித்துளிகள்

நல்லோர் மனதை நடுங்கச் செய்வது பாவம்.
வலிய வழக்கிட்டு மானம் கெடுப்பது பாவம்.
தானங் கொடுப்போரை தடுப்பது பாவம்.
மனமொத்த நட்பிற்கு வஞ்சகம் இழைப்பது பாவம்.
ஏழைகள் வயிறு எரியச் செய்வது பாவம்.
பசித்தோர் முகத்தைப் பாராதிருப்பது பாவம்.
கோள் சொல்லிக் குடும்பத்தைக் களைப்பது பாவம்.
குருவை வணங்கக் கூசி நிற்பது பாவம்.
ஊன்சுவை உண்டு உடலை வளர்ப்பது பாவம்.
கல்லும் நெல்லும் கலந்து விற்பது பாவம்.
தாய்,தந்தை மொழியைத் தட்டி நடப்பது பாவம்.
முன்கோபக்காரரோடு பழக்கம் கூடாது.
குறைகளைப் பெரிதாகச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.
கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது.
வம்பு பேசுவோர் வாய் பார்த்து அவர் பின்னே அலையக் கூடாது.
தன்னை மதிக்காதவர் வீட்டிற்குச் செல்லக் கூடாது.
சேரத் தகுதி இல்லாதவர்களோடு சேரக் கூடாது.
தனக்கு உதவி புரிந்தோரை ஒருபோதும் மறக்கக் கூடாது.
காணாததைக் கற்பனை செய்து கூறக்கூடாது.
அடுத்தவர் மனம் நோக எதையும் கூறக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இந்துமாமன்றத்தினதும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தினதும் தோற்றமும் வளர்ச்சியும்

எஸ்.நவாகரன், இந்து மாமன்ற முன்னாள் தலைவர்,
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்ற தமிழ் மாணவர்களுக்கென்று ஓர் அமைப்பாக இந்து மாமன்றமானது 2007ஆம ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டாலும் அதன் அங்குரார்ப்பண நிகழ்வானது 25-11-2008ஆம் திகதியன்று மிகவும் கோலாகலமாக நிகழ்த்தப்பட்டது. அக்காலகட்டங்களில் மிகக் குறைவான தமிழ் மாணவர்களை உறுப்பினர்களாக கொண்டிருந்தாலும் விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரின் ஆதரவோடு தமிழர்களின் முக்கிய பண்டிகைகளான தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி முதலானவற்றையும் தமிழர்களின் பண்பாடு, கலை, கலாசாரம் போன்றவற்றை பேணும் வகையில் பல்வேறு கலை நிகழ்வுகளையும் சிறப்பாக நடாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழர்களின் அடையாளத்தினை நிலைநாட்டி வருகின்றது. அதேவேளை, இந்து மாமன்ற செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் ஒரு சிறிய அறை வழங்கப்பட்டது. அவ்வறையினுள் எமது முக்கிய வழிபாடுகள் இடம் பெற்று வந்தாலும் கூட அனைத்து தமிழ் மாணவர்களும் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக வயல்வெளியின் மத்தியில் வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் மடத்தடி முத்துமாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தல், நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தல் என்பன வழமையான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

அத்தோடு, இந்து மாமன்றத்தினுடைய மூன்றாவது நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பினை பொறுப்பேற்கும் சந்தர்ப்பம் அடியேனுக்கு எட்டியது. அப்போது தான் சகோதர இனத்தைச் சேர்ந்த மாணவர்களினால் அவர்களின் வழிபாட்டிற்காக பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டது. அதன் மூலமாக இந்து ஆலயம் ஒன்றினை அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இந்து மாமன்றத்திற்கு கிடைக்கப் பெற்றது. எனவே, இச்சந்தர்ப்பத்தினை நானும் எனது நிர்வாகமும் பெரும் வரப்பிரசாதமாக எண்ணி பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம் இந்து ஆலயம் அமைப்பதற்கான அனுமதி கோரப்பட்ட போது குறிப்பிட்ட காலத்தின் பின் ஆலய நிர்மாணத்துக்கான அனுமதியும், இட ஒதுக்குதலும் வழங்கப்பட்டது.

ஆலய திருப்பணியின் முதற்கட்ட நடவடிக்கையாக இந்து மாமன்றத்திற்கென வங்கி நடைமுறைக்கணக்கொன்று செயற்படுத்தப்பட்டது. அதன் பின்னர், திருப்பணிக்கான நிதி சேகரிக்கும் பணிகள் ஆரம்பமானதை தொடர்ந்து முதலாவதாக அனைத்து தமிழ் மாணவர்கள், தமிழ் விரிவுரையாளர்கள், தமிழ் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து நிதியுதவினைப் பெற்று ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. அதற்குப் பின் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்தும் உதவிகளைப் பெற்றுக் கொண்டோம். அதன் பின் ஆலயத்தின் நிர்மாணப்பணியை திறம்பட நடாத்த எமது நிதிசேகரிப்பு நடவடிக்கைகளை வேறுவிதமாகவும் திட்டமிட்டுக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, வாரத்தின் விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலையிலிருந்து மாலை வரை வெயில், மழை, பசி, உடற்சோர்வு என்பவற்றையெல்லாம் பொருட்படுத்தாது அனைத்து மாணவர்களும் ஆண், பெண் பேதமின்றி குழுக்களாக பிரிந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள தமிழ் பிரதேசங்களில் இருக்கக் கூடிய அனைத்து வீடுகளுக்கும் கால்நடையாகச் சென்று சேகரிக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தின் மூலமாக ஆலயத்தின் நிர்மாணப்பணி சிறப்பாக நாளுக்குநாள் புதுப்புது பொலிவுடன் உருவெடுத்தது.

அதுமட்டுமல்லாமல், விடுமுறை தினங்களைக் கழிப்பதற்காக தமது வீடுகளுக்குச் சென்ற மாணவர்கள் தத்தமது பிரதேசங்களில் உள்ள முக்கியஸ்தர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியும் ஆலய திருப்பணிக்காக வந்து சேர்ந்தது. உண்மையிலே திட்டமிட்டதனை விட மிகவும் பிரமாண்டமான முறையில் கருவறையும், கலசமும், கலசத்தின் மேல் அமைக்கப்பட்ட சிற்பங்களும், சுற்றுப்புற மதிலும் எங்களை மேலும் உற்சாகப்படுத்தியது. அவ்வேளை, ஆலய முன்றலில் மண்டபம் ஒன்றினை அமைத்துக் கொள்வதற்கும், ஆலய கும்பாபிஷேகத்தினை நடாத்துவதற்கும் போதுமான நிதியின்மையினால் நிர்மாணப்பணி இடைநடுவே ஸ்தம்பிதம் அடைந்து கொண்டது. இவ்வேளையில், எமது பல்கலைக்கழக வாழ்வும் முற்றுப் பெற இந்து மாமன்றத்தின் நிர்வாகத்தினையும், எனது தலைமைப் பொறுப்பையும் என் இளையோரிடம் ஒப்படைக்க வேண்டிய நேரம் நெருங்கியது. அதன்பின், பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியேறியிருந்தாலும் கூட மண்டபத்தினை அமைப்பதற்கும், ஆலய கும்பாபிஷேகத்தினை நடாத்துவதற்கும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான நிதிசேகரிப்பு முயற்சிகள் எட்டாக் கனியாகிப் போயின.

அதன் பின்னர், நிர்வாகத்தினை பொறுப்பேற்றுக் கொண்ட புதிய நிர்வாகத்தினர் அரும்பாடுபட்டு பல்வேறு விதமான நடவடிக்கைகளின் மேற்கொண்டதன் மூலமாகவும், புதிய மாணவர்களின் வருகையின் மூலமாகவும் நிதியினைத் திரட்டி ஆலயத்தின் நிர்மாணப்பணியினை முற்றுப் பெறச்செய்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மையிலே, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து மாமன்றத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயமானது அனைத்து தமிழ் மாணவர்கள், தமிழ் விரிவுரையாளர்கள், தமிழ் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரது ஒட்டு மொத்த உழைப்பினையும், ஒற்றுமையையும் வெளிக்காட்டுகின்ற ஒரு சின்னமாகவே காணப்படுகிறது. எனவே, இவ்வாலய நிர்மாணப் பணிக்கு உதவிய அனைத்து நலன்விரும்பிகளுக்கும் அனைத்து தமிழ் உறவுகளுக்கும் இவ்விதழின் மூலமாக கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு முக்கியமாக எமது பல்கலைக்கழக உபவேந்தர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'நன்றி'

**'இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மாமன்ற முன்னாள் பொருளாளரின் இதயத்தில் இருந்து....

ஆ. நிதிராஜ், இந்துமாமன்ற முன்னாள் பொருளாளர், வர்த்தக முகாமைத்துவபீடம்,
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

**'இரும்பினின் வலியரேனும் எழுத்தறிவில்லாரேனும்**
**மருப்பினாற் பாரதத்தை வரைவினிற் பொறித்தான் தன்னை**
**விருப்பொடு அர்ச்சனையியற்றி விரதமுமநுட்டித்து அன்னோன்**
**திருப்பதம் மறவார் என்றும் திருவருள் பெறுவரன்றே'**

(விநாயக புராணம்)

கடலும் மலையும் கவிபாட, வயல் நிலங்கள் வளங்கூட்டும் எழில்மிகு கிழக்கிலங்கையில், பல்லின சமூக மாணவர்களும் பல கலை பயிலும் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா மலரில் இந்து மாமன்ற முன்னாள் பொருளாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதை பெரும் பேறாகக் கருதுகிறேன்.

ஆன்மீக ஒழுக்கம் நிறைந்த பல புத்திஜீவிகளை உருவாக்குகின்ற இடம் பல்கலைக்கழகம். அந்தவகையில், இவ்வளாகத்தில் அமைக்கப்பெற்ற எம்பெருமானின் இவ்வாலயம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் ஒன்றியத்தின் அயராத முயற்சியின் விளைவாக உருவான ஒன்று. அந்த வகையில் வரலாற்றில் பொறிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்ட இவ்வாலயம் சமய பண்பாட்டுக் கருவூலமாக அமைந்து ஆண்டு தோறும் பெருவிழாக்காண வேண்டுமென்பது எனது அவாவாகும்.

அவ்வகையில், 'ஆலயந் தானே அரன் எனத் தெழுமே' என்னும் திருமந்திர அடிக்கு அமைவாக கற்பக கணபதியின் இப்புனித கைங்கரியத்தில் ஈடுபட்டு பண உதவி, சரீர உதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் வழங்கிய சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் அமைப்பு ரீதியில் உதவிய சமய நிறுவனங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய அன்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்வதோடு வரலாற்றுத் தடம் பதிக்கும் மலர்க்குழுவினருக்கும் கும்பாபிஷேக குழுவினருக்கும் மற்றும் ஏனையோருக்கும் இந்து மாமன்ற முன்னாள் பொருளாளர் என்ற வகையில், நெஞ்சம் நிறைந்த நன்றிகளை நவின்று விகடசக்கரன் பெயரால் போற்றுகின்றேன்.




**கும்பாபிஷேகம் இனிது நிறைவுறுக!**
**இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!**

**தீபம்•** நெய் தீபம் ஏற்றினால் நமக்கு ஞானம் கிட்டும்.• எள் எண்ணெய் தீபம் யமபயத்தை போக்கும்.• இலுப்பெண்ணெய் தீபம் ஆரோக்கியத்தை கொடுக்கும்.• ஆமணக்கு எண்ணெய் தீபம் செல்வத்தை பெருக்கும்.• மண் அகல் தீபம் வீரய விருத்தியைக் கொடுக்கும்.• வெண்கல விளக்கின் தீபம் அகால மரணத்தை தவிர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்து மாமன்றத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வுகள் சில...

**2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொங்கல் விழா.**






**2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'திரிவேணி சங்கமம்' மாபெரும் கலைவிழா.**






**2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொங்கல் விழா.**



**ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் நிர்மாண பணிகள்.



2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிவராத்திரி விழா.



2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைத் தேடி...

லோ.சந்தியா டிலானி, நான்காம் வருடம், பொருளியல் விஷேடகற்கை
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

வாழப்பிறந்த வாழ்க்கைதனில்
வாரிப்பொழியும் இன்னல்களை
வழங்கியது இறைவனென்று
வாய்கூசாமல் சொல்கின்றோம்

மனிதனாய் படைக்கப்பட்டதன்
மகத்துவத்தை உணராது
மண்ணுக்குள் மாய்ந்துபோன
மனிதர்கள்தான் எத்தனை

ஆயிரம் மதங்கள்
அடுக்கடுக்காய் வந்தபோதும்- அவை
அன்பெனும் ஒன்றையே
அகிலத்தில் வேண்டிநிற்கிறது

சிவனின் பார்வையில் அன்புண்டு
இயேசுவின் வார்த்தையில் பண்புண்டு
அல்லாவின் நீதியில் உண்மையுண்டு
மனித வாழ்வில் இவையொன்றுமில்லை

விஞ்ஞானம் வளர்ந்தது
மனித ஞானத்தை அது அழித்தது
அறிவியல் வளர்ந்தது
தேவ அன்பை அது வெறுத்தது

மதங்களுக்குள் போட்டி
எந்த சக்தி சிறந்ததென்று
மதங்களுக்குள் சண்டை
எங்கள் மதம் முதன்மை என்று

அகிலத்தை ஆளும் சக்தி
பல பெயர் கொண்டழைப்பதை
மாண்போடு ஏற்காத மனிதகுலம்
மாயையின் பின் செல்கிறது

அகந்தையை துறந்துவிட்டு
அடுத்தவரை மன்னித்து
அன்பால் நிறைந்திருக்கும்
அகத்தினில் காணலாம் இறைவனை

மதங்களை உணரமுன்
மனச்சாட்சியை உணரும்போது
மரணித்துப் போன களங்கள் கூட
மனிதநேயத்தை தேடிப்போகும்

இன்னல் நிறைந்த வாழ்வில்
இறைவனை தேடுகின்றறோம்
விரக்தியான நம்பிக்கையில்
விமர்சித்து தேடுகின்றோம்

பிறக்கும் போதே நம்மை
கற்றறிந்த இறைவன்
பிழையான வாய்ப்பை என்றும்
நமக்கு தந்திட மாட்டார்

பிறந்த பிறப்பினுள் பல
பித்தலாட்டங்கள் செய்து
வழிதவறிச் சென்ற பின்னர்
பிறப்பை குறை கூறுகின்றோம்

அல்லல்படும் இவ்வுலகில்
அன்பென்ற ஒன்றைத்தவிர
இறையன்பை வென்றிட வேறு
எளிமையான வழியில்லை

கடந்துபோன இரவுகளை
கானல் நீராய் மாற்றிவிட்டு
கலைத்திடுங்கள் உங்கள்
கள்ளமான உள்ளங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவனே தேவன்

டி. பிரவுண்சன், மூன்றாம் வருடம், மெய்யியல் விஷேடகற்கை
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

பூமியும் அதனைச் சுற்றியிருக்கின்ற கோள்களும் உயிரினங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் இயங்குகின்றன. இதனை, ஆராயும் பொழுது இவற்றையெல்லாம் இயக்க, மேலான சக்தி ஒன்று இருக்க வேண்டுமென்று அறியமுடிகிறது. இச்சக்தியைக் கடவுள் என நாம் அழைக்கின்றோம். இந்தவகையில், இந்து சமயத்தில் கடவுளின் செயற்பாடுகளைக் கொண்டு, தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்கியவர், பேருளுடையவர், முடிவிலாற்றலுடையவர், வரம்பில் இன்பமுடையவர் என்றெல்லாம் உணர்ந்துகொள்ளலாம்.

சைவசமயம் பதி, பசு, பாசம் ஆகியன முப்பொருள் எனக்கூறுகின்றது. இந்த முப்பொருள் அழிவில்லாதது, என்றும் உள்ளது எனப் பேசப்படுகின்றது. இம்மூன்றுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன. பசு பதியை அறிய முடியாமல் இருக்கின்றது. அதற்குக் காரணம், பசு பாசத்தால் பீடிக்கப்பட்டிருப்பதே ஆகும். இப்பாசத்தில் இருந்து பசு நீங்கி பதியை அடைவதற்கு உதவியாக உடம்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. உடம்பும் பாசத்தின் ஒரு வடிவமே.

உயிரினங்கள் கடவுளிடமிருந்து மிகத் தூரத்தில் வாழ்கின்றன. அவை ஒவ்வொரு பிறவியிலும் முன்னேறிச் செல்லும் என நம்பப்படுகிறது. சைவசமயம் உருவமும் பெயரும் செயலும் இல்லாத கடவுளுக்கு அருவம், உருவம், அருவுருவம் எனும் மூவகை திருமேனிகள் உள்ளன எனக் கூறுகின்றது. இந்த வகையில் அருவத் திருமேனி சிவம், சக்தி, நாதம், விந்து என்ற நான்கையும் உருவத் திருமேனி மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரம்மன் என்ற நான்கையும் அருவுருவத் திருமேனி சதாசிவன் என்ற ஒன்றையும் கொண்டனவாகும். இந்த ஒன்பது வடிவங்களையும் நவபேதங்கள் என அழைப்பர்.

அக்கினி ஒரு பொருளாக எண்ணும் பொழுது அது ஒன்றேயாகும். அதன் வடிவத்தைப் பார்க்கும் பொழுது செந்நிறமென்றும் குணத்தைப் பார்க்கும் பொழுது சூடு உடையதென்றும் பிரித்து அறிகின்றோம். மின்சக்தி ஒளியையும் வெப்பத்தையும் தருவதோடு வெவ்வேறு நிலைகளில் தொழில் புரிகின்றது. அதுபோலவே பரம்பொருளும் ஒருவராக இருந்தும் எல்லாவற்றையும் கடந்து நின்று தன்னிடத்திலிருக்கும் வலிமைக் குணத்தால் சக்தி எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனது திருவுருவம் அருளாகும். கணபதி, சுப்பிரமணியர், வைரவர் வீரபத்திரர் என்னும் மூர்த்தங்கள் இறைவனது அருள் வடிவங்கள். மணியையும் ஒளியையும் பிரித்து அறிய முடியாததைப் போலச் சிவபிரானுக்கும் இம்மூர்த்தங்களுக்கும் பேதமில்லை. திருமூலர் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்' என வற்புறுத்தகிறார். 'ஒன்றுண்டு பரம்பொருள் கண்டீர்' என்று பாரதியார் கூறுகிறர். திருக்கோயில் வாயில்களில் உள்ள தூவாரபாலகர்களில் ஒருவர் ஆட்காட்டி விரலைக் காட்டி நிற்கின்றார். அது நமக்கு கடவுள் ஒருவர் தான் உண்டு, எனும் குறிப்பினை உணர்த்துகின்றது. கடவுள் பக்தகோடிகளுக்கு வெவ்வேறு வடிவங்களில் மனதில் தோன்றிப் பேரன்பைச் பொழிகின்றார். அருள் பெற்றோர், இறைவன் தமக்குக் காட்சி தந்த வடிவங்களை எழுதிப்பெயர் கொடுத்து வைத்துள்ளனர். ஒவ்வொருவரும் தாம் விரும்பிய வடிவங்களில் வணங்கிப் போற்றுகின்றனர். சைவ நாயன்மார்கள் சிவன் வடிவிலும் ஆழ்வார்கள் திருமால் வடிவிலும் அபிராமிபட்டர் முதலியோர் சக்தி வடிவிலும் அருணகிரிநாதர் முருகன் வடிவிலும் வணங்கிப் பேறுகள் பெற்றுள்ளனர்.
இவ்வகையில், சிவஞான சித்தியார்;

> "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம்
> ஆகியாங்கே - மாதொரு பாகனர் தாம் வருவர்'

என கூறுகின்றது.

> "யாதொரு பொருளை யாவர் இறைஞ்சினும்
> அதுபோய் முக்கண் ஆதியை அடையும் அம்மா'

என கந்தபுராணம் வற்புறுத்துகின்றது.

சைவ சாத்திரங்கள் இறைவனை அடைவதற்குத் தாசமார்க்கம், சற்புத்தி மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு வகை மார்க்கங்களை எடுத்துக்கூறுகின்றன. சமய குரவர்களுள் திருநாவுக்கரச சுவாமிகள் தாசமார்க்கத்தில் நின்றார். ஞானசம்பந்தப்பெருமான் சற்புத்திர மார்க்கத்தில் நின்றார். 'கற்றதனாலாய பயன் இறைவன் கழலடி பணிதலென' மேலோர் கூறியதோடு அதனைச் செயலிலும் காட்டிச்சென்றனர்.

இங்ஙணம், ஏகனாக நிற்கும் இறைவனின் அருளைப் பெறுவதற்கு இலகுவான வழி திருக்கோயில் வழிபாடாகும். கோயில் ஆலயம் என்றும் கூறுகின்றோம். அப்பெயர் ஆன்மா லயப்படுவதற்கு உரிய இடம் என்றும் பொருள்படும். பசுவின் மடியிலே பால் சுரந்து விளங்குதல் போலத் திருக்கோயிலிலே திருவருள் விளக்கம் பெற்று விளங்குகின்றது. கோயில் வழிபாட்டில் மனம் ஒடுங்குவதற்கேற்ப பூசை நடைபெறுகின்றது. பூசையில் அபிஷேகம், அலங்காரம், நைவேந்தியம், தீபாரதனை, அர்ச்சனை, வாழ்த்து, தோத்திரம் முதலிய படிக்கிரமங்கள் உள்ளன. சமய குரவர்கள் ஆலயங்களுக்குச் சென்று தோத்திரம் பாடி தொண்டு புரிந்த பாங்கினையும் நாம் நினைத்தல் வேண்டும். இவ்வாறு, நியமங்களை கடைபிடித்து ஒழுகும் போது ஒருவனே தேவன் எனும் சிந்தனை வெளிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் திருவிழாக்கள் ஏற்படுத்தும் மனித உறவின் புத்தாக்கம்

ந.சுபராஜ், விரிவுரையாளர், இந்துநாகரிகப்பிரிவு மொழித்துறை,
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

**திருக்கோவிலும் திருவிழாவும்**

மதம் என்பது தெய்வம், பக்தர்கள், விழுமியங்கள், திட்டமிடல்கள், சட்டங்கள் என்பவற்றைக் கொண்ட ஒரு நிறுவனம் சார்ந்த அமைப்பு முறையாகும். இதன் முக்கிய பங்கு சமூக ஒருமைப்பாட்டைப் பேணுவதென்பதாகும். இந்நோக்கத்திற்காக மதங்கள் ஏற்படுத்தி வைத்த செயன்முறையாக திருவிழாக்கள் அமைகின்றன. உலகத்தில் உள்ள மதங்கள் அனைத்துமே திருவிழாக்களை வற்புறுத்தி நிற்கின்றன. திருவிழா எனும் செயன்முறை மனிதனுக்குள் உள்ள பிணக்குகளைத் தீர்த்து இணக்கப்பாட்டை ஏற்படுத்துகின்றது எனும் உண்மையை மதங்கள் அனைத்தும் கண்டு கொண்டுள்ளமையாலேயே திருவிழாக்கள் எல்லா மதங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனவாக உள்ளன.

தேவகிருகம்,தேவாகாரம்,தேவாயதனம்,தேவாலயம்,தேவகுலம், தேவமந்திரம்,தேவபவனம், தேவஸ்தானம், தேவவேஸ்மம், சைத்தியம், ஷேத்திரம் போன்றவை சிற்ப சாத்திரங்கள் கோவிலுக்கு வழங்கும் பெயர்களாகும். இது தவிர பிரசாதம்,ஆலயம், கோயில் எனவும் திருக்கோவில்கள் அழைக்கப்படுகின்றன. தம் அழகினால் தேவர்களினதும், மக்களினதும் உள்ளங்கவர்ந்து அகமகிழ்வினை எய்துவிப்பதனால் கோவில்கள் பிரசாதம் என அழைக்கப்படலாயிற்று என்கிறது சிற்பசாத்திரம். கோவில் எனுஞ் சொல்லுக்கு சிற்ப நூல்கள் இறைவனின் உறைவிடம் எனும் விளக்கத்தை கொடுக்கின்றன என்கின்றார் கைலாசநாதக்குருக்கள்.

**திருக்கோவில்**

கோவில் எனும் பதத்தை பழந்தமிழ் இலக்கியங்கள் கோயில், நகரம், கோட்டம், நியமம், பொதியில், பதி முதலான சொற்களால் குறித்துள்ளன. இவற்றுள் பொதியில், பதி, நகரம் முதலிய சொற்களே ஆரம்ப காலக் கோவில்களைக் குறித்துள்ளன.

> **"கலிகெழுகடவுள் கந்தம் கைவிட**
> **பலிகண்க மாறிய பாழ்படு பொதியில்"** (புறம். 52:12-13)

> **"ஆன்றடங்கறிஞர் செறிந்தனர் நோன்மார்**
> **கல்பொழிந்தன்ன விட்டவாய்க் கரண்டைப்**
> **பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்**
> **கயங்கண்டன்ன வயங்குடை நகரத்து**
> **செம்பியன்றன்ன செஞ்சுவர் புனைந்து"** (மதுரைக்: 481:485)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளை யானைக் கோட்டம்
வச்சிரக் கோட்டம்" (சிலம்பு: 9:9, 9:12)

எனக் கோவிலை பழந்தமிழ் இலக்கியங்கள் குறித்து நிற்கின்றன. கோவிலைக் குறிக்கும் கோட்டம் என்ற சொல் சற்று பிற்காலத்தில் வழங்கப்பட்ட சொல்லாக உள்ளது. கோவில் எனும் பதம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லையாயினும் அதற்கு நிகரான சொற்களை கண்டு கொள்ளலாம். பிற்காலத்தில் கோவில் எனும் பதம் போலி எழுத்தையுடைய பதமாகக் கருதப்பட்டு கோயில் எனும் பதமே "இறைவன் உறையும் இடம்" என்பதற்கான சரியான புணர்ச்சி எனக் கொண்டனர். ஆனால் கைலாசநாதக்குருக்கள் போன்றோர் கோவில் எனும் பதத்தையே சரியானதெனக் கொள்வர்.

**திருவிழா**

'ஒரு புனிதப் பொருளின் மீது வைக்கும் நம்பிக்கையே' சமயம் என்கிறார் எமில் துர்கைம். இதுபோல் சிக்மன் ப்ரொய்ட் சமயம் என்பது 'மனித உளவியலின் கூட்டு உற்பத்தியாகும்' என்கிறார். இவ்வெண்ணக்கருக்களின் அடிப்படையிலேயே நாம் திருவிழாக்களின் உருவாக்கத்தை நோக்க வேண்டியுள்ளது. திருவிழா என்பது பல தனிக்கூறுகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் ஒரு தொகுதி (Complex) ஆகும். இது ஓர் ஆண்டின் சமூக சமய வாழ்வின் உச்சக்கட்டம் அல்லது சில ஆண்டுக்கு முன்பு நடத்திய திருவிழாக்களிற்குப் பின் ஏற்பட்டுள்ள சமூக சமய வாழ்விற்கான உச்சக்கட்டம் என மானிடவியலாளர்கள் இலக்கணம் வகுப்பர். அதாவது, 'எப்போதும் இல்லாத அளவிற்கு கூட்டு நனவிலியில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நெருக்கடியைச் சமாளிக்க சேர்ந்த சேர்மமே சடங்குகள் அல்லது திருவிழாவாகும்' என்கிறார் பக்தவத்சலபாரதி.

**உறவுகளைப் புதுப்பிக்கும் திருக்கோவிற் திருவிழாக்கள்**

மனிதன் நெருக்கடியின் மத்தியில் வாழும் சமூகப் பிராணி என்ற வகையில் பொதுவாக, அவனால் நிகழ்த்தப்படும் இத்திருவிழாக்கள் நெருக்கடிகளைச் சமாளிக்க நிகழ்த்தப்படும் ஒரு பண்பாட்டு நிகழ்வு என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். பிரபஞ்சத்தின் முக்கிய கூறாக அமையும் மனிதகுலத்தின் இயக்கத்தில் இன்பத்தின் பகுதியை விட துன்பத்தின் பகுதி பரந்தது. மனிதன் நெருக்கடிக்குள்ளும் பல சிக்கல்களுக்கும் மத்தியில் துன்பப்படுகின்ற போது அவற்றுக்கான தற்காலிகத் தீர்வாக கொண்டாட்டங்களை ஏற்படுத்தினான். அவை, இன்று திருக்கோவிற் திருவிழாக்களாக உள்ளன. உண்மையில் புராதன காலத்தில் மனிதன் இறைவழிபாட்டிற்காக ஆலயம் அமைப்பதற்கு முன்பே திருவிழாக்களைக் கொண்டாடத் தொடங்கி விட்டான். பண்டைத்தமிழக இலக்கியக் குறிப்புக்கள் இதனை காட்டி நிற்கின்றன. திருவிழாக்கள் மனிதனுக்குள் இருக்கும் பிணக்குகளை தீர்ப்பதற்கான தளமாகவும் இருந்ததன் காரணமாகவே காலந்தோறும் அது பல்பரிணாமம் அடைந்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹென்றி ஒயிட் கெட், தனது The Village Gods of South India எனும் நூலில் 'திருவிழாக்களில் தெய்வத்தை கிராம தேவதை அல்லது ஊர் அம்மா என மக்கள் அழைத்து கொண்டாடுவது சமூக ஒற்றுமையை வளர்த்து நிற்கின்றது' என்கின்றார். உறவுகளின் ஐக்கியம் மனிதனின் பல தேவைகள் காரணமாக விலகிச் செல்கின்ற வேளை திருவிழாக்களின் போது ஆலயத்தில் உறையும் தெய்வத்தை 'எமது அம்மா' என உறவு கொண்டு அழைக்கும் போது மனித உறவுகள் மீண்டும் நெருக்கமடைகின்றன. இதனை உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன எனச் சுட்டுதல் மிகப் பொருத்தமானது.

இதனையே, விக்டர் டெர்னர் எனும் அறிஞர் தனது எதிர் அமைப்பியல்வாதத்தின் ஊடாக சடங்குகள் அல்லது திருவிழாக்கள் என்பவை ஒருவர் ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு மாறும் நிலைமாற்றத்தோடு தொடர்புபடுத்துகிறார். அதாவது, வாழ்வின் நீண்டபயணத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்த்தப்படும் சடங்கானது பலமாறுதல்களை ஏற்படுத்துகின்றது என்கிறார். இதனையே, இவர் தளமாற்றம் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது. தளமாற்றம் என்பது சமூக இடைவினை இல்லாமல் பழமையாகி அல்லது முரண்பட்டுப் போன உறவுகளின் புத்தாக்கம் எனும் சமூக விளைவைக் குறிக்கின்றது.

திருவிழாக்களின் போது எமது தனிப்பட்ட தகுதி நிலைகள் (Status), பால்நிலைகள் (Gender), பங்குகள் (roles) ஆகிய படிநிலைப் பண்புகள் இல்லாமல் போகின்றன. எல்லோரும் இறையடியார்கள் எனத் தோன்றும் தன்மையைக் காணலாம். எனவே, இங்கே தனிநபர்களின் தனிப்பட்ட அடையாளங்கள் நீக்கப்பட்டு சமதகுதியுடன் அனைவரும் சஞ்சரிக்கும் தன்மையைக் காணலாம். இதனை, டர்னர் மீசமுகம் (communitas) என்கிறார். அதாவது, எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனைவரும் ஒன்று எனும் நிலையை அடைந்திருக்கும் இச்சமூகத்தை மீசமூகம் என சமூகவியலாளர்கள் சுட்டுவர். இத்தகைய மீசமூகத்தை ஏற்படுத்தி உறவுகளின் ஐக்கியத்தை பலப்படுத்தும் ஓர் நிகழ்வாகவே திருக்கோவிற் திருவிழாக்கள் அடையாளங் காணப்படுகின்றன.

கடவுளோடு ஆன்மாவை ஐக்கியப்படுத்தும் ஒரு நிகழ்வாக இத்திருவிழாக்களை காண்கின்ற அதேவேளை மனித உறவுகளின் பிணக்குகளை தீர்க்கும் இடமாகவும் இத்திருவிழா கொண்டாடப்படும் திருக்கோவில் அமைகின்றது. இதனால்தான்,

"நில உரிமைக்காரனாகவும், முதலாளியாகவும் பொருட்களை நுகர்வோனாகவும், சேவைகளைப் பெறுவோனாகவும் விளங்கிய கோயில் வங்கியாகவும், பள்ளிக் கூடங்களாகவும், வைத்தியசாலைகளாகவும், நாடகமன்றங்களாகவும் விளங்கியது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் கூறினார். இதுபோல், தெ.வே. மகாலிங்கம்,

"ஒரு தலத்திலுள்ள மக்களின் சமய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்ற உயிர்த்துடிப்புள்ள இடமாக கோயில் விளங்கியது மட்டுமன்றி அது அவ்வூர் மக்களின் அரசியல், சமூக, பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்கு கொண்ட நிறுவனமாக விளங்கியது"

எனத் திருக்கோவில் பற்றியும் அதன் சமூகத்தேவை பற்றியும் விளக்கியுள்ளார். இத்தகைய சமூகத்தேவைகளை பூர்த்தி செய்யும் செயன்முறை வடிவமாகவே திருவிழாக்கள் உள்ளன. இத்திருவிழாக்காலங்களில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு புனிதப் பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன. அவ்வாறு கொண்டு செல்லப்படுகின்ற இடங்கள் யாவும் புனிதத்துவம் பெறுகின்றன. இவ்வாறு திருவிழாக்களில் புனிதப் பொருட்கள் கொண்டு செல்லப்படும் சந்தர்ப்பங்களாக,

1. ஊர்க்காவல் பண்ணுதல்.
2. ஆகமஞ் சாரா வழிபாட்டில் ஒரு இடத்தில் இருந்து சடங்குக்காக புனிதப் பொருட்களை ஆலயத்திற்கு கொண்டு வருதல்.
3. சாமி வீதி உலா வருதல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவை நிகழப்படும் இடங்கள் யாவும் புனிதமடைகின்றன. மனிதனின் தகுதி நிலைகள் இதன்போது அழிக்கப்படுகின்றன. ஊர்க்காவல் பண்ணும் போதோ சாமி உலா வரும் போதோ உயர்ந்த சாதியின் இடம், தாழ்ந்த சாதியின் இடம் என்று பார்ப்பதில்லை. தகுதிநிலை, பால்நிலை என அனைத்து நிலைகளும் ஒன்றாகச் சங்கமிக்கும் நிகழ்வாகவே இத்திருவிழாக்கள் காணப்படுகின்றன. இத்தகைய பேதங்களால் பிளவுபட்டு நிற்கும் உறவுகள் இதன்போது மீளவும் இணையும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே, இத்திருவிழாக்கள் மூலம் சமூக இறுக்கங்கள் தளர்த்தப்படுகின்றன.

சமூகம் மனிதனுக்கென விதித்துள்ள சில சட்டதிட்டங்கள் அவனது சுதந்திரம்,சிந்தனை, மகிழ்ச்சி ஆகியவற்றை இல்லாமல் செய்து விடுகின்றது. எடுத்துக்காட்டாக, பெண்கள் இரவு நேரங்களில் வெளியில் செல்லக் கூடாது, கூட்டம் கூடும் இடத்திற்கு செல்லக் கூடாது, அதிகம் பேசக்கூடாது எனப் பலவற்றைக் கூறலாம். அதுபோல் குழந்தைகள், இளைஞர்கள், தலைப்பிள்ளைகள் எனப் பலவகைப்பட்டோருக்கும் விதிமுறைகளை வகுத்து வைத்திருப்பர். இக்கட்டுப்பாடுகளை திருவிழாக்கள் தளர்த்தி விடுகின்றன.

குறிப்பாக ஆகமஞ்சாரா வழிபாடுகளின் போது பெண்களே முக்கியம் பெறுவதோடு அவர்களிற்கு ஏனையோர் கட்டுப்படுவர்களாகவும் உள்ளனர். இங்கு பெண்கள் தெய்வமாடுவது என்பது பிரதான நிகழ்வாக உள்ளது. அத்தோடு கன்னிப் பெண்கள், சுமங்கலிப் பெண்கள் ஆகியோரும் முக்கியம் பெறுகின்றனர். ஆனால், சாதாரண வாழ்வியலில் இவ்வாறான தன்மையைக் காணமுடியாது. திருவிழாக்களின் போது இதுபோன்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதோடு மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் தளமாற்றம் அடைகின்றது. அத்தளமாற்றத்தில் உறவுகளைச் சமூகம் புதுப்பித்துக் கொள்கின்றது. திருவிழாக்காலங்களில் அனைவரும் ஒருபடித்தான நிலைக்குட்படுகின்றனர்.

**1. புனித நீராடல்.**
**2. சடங்கு உடை அணிதல்.**
**3. பொங்கல் இடுதல்.**
**4. மொட்டை அடித்தல்.**
**5. அங்கப் பிரதட்சணம் செய்தல்.**

போன்ற செயன்முறைகளுடாகவும், அறிமுகமில்லாதவர்கள், வேற்று மொழி பேசுபவர், வேற்றுச் சாதியினர் ஆகியோருடன் இணைந்திருந்தலூடாகவும் அனைவரும் பக்தர்களே எனும் ஒருபடித்தான நிலைக்குள் செல்கின்றனர். தமது கிராமங்களில் இடம் பெறும் திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்தவெண்ணி பகையை மறந்து அனைத்து குடி மக்களும் தமது உடல் உழைப்பை நல்குதல் உறவுகள் கட்டியெழுப்பப்பட காரணமாக அமைகின்றன. இவற்றில் உயர் தொழில் செய்வோர், சாதாரண தொழில் செய்வோர் என்ற வேறுபாடுகள் களையப்பட்டு, தம்மால் இயன்ற கட்டணங்களைச் செலுத்தி கோவிலின் திருவிழாவை நடாத்த முனையும் செயன்முறையானது பிணக்குகளைத் தீர்க்கின்றது.

திருவிழாக்காலங்களில் இடம் பெறும் கலை நிகழ்வுகளை அனைத்து மக்களும் ஒன்றாக இணைந்து இரசிக்கின்றனர். கோவிலுக்கு பல்வேறு காரணங்களால் வர முடியாதவர்களுக்காக சில கூத்து நிகழ்வுகளை அவர்களின் வீட்டுக்கே சென்று ஆடிக்காட்டும் வழமையும் பல இடங்களில் உண்டு. இதனை 'வீட்டுக்கு வீடு ஆடிச் செல்லல்' என அழைப்பர். இதுபோல், நேர்த்தி செலுத்தும் போது பொருள் இழப்பு, நோய்கள் போன்ற ஒரே தன்மையான காரணங்கள் அனைத்துப் பிரிவினருக்கும் உரியதாக இருப்பதால் ஒருமனப்பட்டதான செயன்முறைகளை அவர்களிடத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. இறுதி நாளன்று வழங்கப்படும் அன்னதானத்திற்காக அனைவரும் ஒன்றாகக்கூடி பேசி வேலை செய்வதும், ஒன்றாக அமர்ந்திருந்து உணவு உண்பதும் அவர்களுக்குள் உள்ள கவலைகளைத் தீர்ப்பதோடு தகுதிப் படிநிலைகள் யாவும் அற்றுப் போகின்றன.

நிறைவாக

திருவிழாக்கள் உறவுகளைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டிருக்கும் தன்மையைப் பெற்றவை. வாழ்வின் எண்ணரிய சிக்கல்களுக்கு மத்தியில் நிதமும் உழன்று கொண்டிருக்கும் மனிதர்களுக்கு நிம்மதியைக் கொடுக்கும் நிகழ்வாக மதங்கள் திருவிழாக்களை உருவாக்கியுள்ளன எனத் தெரிகின்றது. இத்திருவிழாக்கள்,

**1. பிரிவினையை மறக்கச் செய்கின்றது.**
**2. மக்களை இணக்கமுறச் செய்கின்றது.**
**3. கருத்து வேறுபாடுகளை மறக்கச் செய்கின்றது.**
**4. அனைவரினதும் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கு வழி வகுக்கின்றது.**
**5. இவற்றின் மூலம் உறவுகளைப் புத்தாக்கம் பெறச் செய்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம், கோவிற் திருவிழாக்களின் உன்னதமான நோக்கம் சிறப்பாக வெளிப்படுகின்றது. நாம் இவற்றைப் பாரம்பரியம் என்கின்றோம். இப்பாரம்பரியத்தை உருவாக்கி விட்ட எம் முன்னோரின் நோக்கங்கள் மனிதர்க்குள் ஒன்றுபட்ட நடத்தை முறைகளை ஏற்படுத்துவதேயாகும். இதை தவிர்த்து கோவில் என்பது குறிப்பிட்ட சாதியினருக்கு என்றும் திருவிழாக்கள் குறிப்பிட்ட வகுப்பினருக்கு என்றும் முரண்பட்டு நிற்பது திருவிழாக்களினதும் திருக்கோவில்களினதும் உண்மையான தார்ப்பரியத்தை புரியாதோரின் செயன்முறைகள் என்றே கூறவேண்டும்.

எனவே பண்பாட்டால் வரையறை செய்யப்பட்டதும் ஓர்நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குள் சஞ்சரிக்கும் நிகழ்வாகிய இத்திருவிழாக்கள் களம் , காலம், சமூகம் ஆகியவற்றை அழித்து ஒரு படித்தான நிலைக்கு மனிதனைக் கொண்டு வருகின்றன. இதன் மூலம் உறவுகள் புதுப்பிக்கப்படுவதோடு சமூக இணக்கப்பாட்டுக்கும் அவை வழிசமைக்கின்றன.

**உசாவிய நூல்கள்**


1. பக்தவக்சலபாரதி, 2005, “தமிழர் மானிடவியல்”, மெய்யப்பன் பதிப்பகம்,சென்னை, ப.24
2. பக்தவக்சலபாரதி., 1990, “பண்பாட்டு மானிடவியல்”, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.524
3. பக்தவக்சலபாரதி, 2005, “தமிழர் மானிடவியல்”இமெய்யப்பன் பதிப்பகம், சென்னை, ப.24
4. பக்தவக்சலபாரதி., 1990, “மானிடவியல் கோட்பாடுகள்”, வல்லினம், புதுச்சேரி, ப.524
5. வடிவேல் இன்பமோகன், 2012, கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை. பக்.178
6. Mahalingam, T.V., 1967, South Indian Polity, Madras, pp.173 – 180
7. Sastri, K.N., 1937, Colas, Madras, pp.504

(Footnotes)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்காசிய நாடுகளில் இந்து இலக்கியங்கள்

ஆ.வனிதா, மூன்றாவது வருடம், இந்து நாகரிக விஷேடகற்கை
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

தென்கிழக்காசிய நாடுகள் என்ற சொல் இரண்டாம் உலக யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகும். இதனை, D.G.E. Hall என்பவர் தனது 'தென்கிழக்காசிய நாடுகள்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தென்கிழக்காசியா என்பது ஆசிய கண்டத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள இந்தோசீன தீபகற்பத்தையும் அதனை அடுத்து உள்ள இந்தோனேசிய, பிலிபைன்ஸ் தீவு கூட்டங்களையும் குறிக்கின்றது. இவற்றில் இந்தோசீன பகுதிகள் எனும் போது பர்மா, கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து, சம்பா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். ஏனைய தீவுப் பகுதிகள் எனும் போது யாவா, சுமத்திரா, போர்ணியோ, செலிபசு, பாலி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில், தென்கிழக்காசியாவில் திருமுறை இலக்கியங்கள் காணப்பட்டன. தமிழகத்தில் மட்டுமின்றி தமிழ் நாகரிகம் பண்பாடு சமயம் என்பன கடல் கடந்து தென்கிழக்காசியா நாடுகளிலும் பரவியுள்ள பாங்கினை இந்தியவியலாளர்கள் நன்கு ஆராய்ந்து கூறியுள்ளனர். கி.பி 1931இல் குவாரிட்ச் எனும் அறிஞர் தாய்லாந்து நாட்டில் நடைபெறும் முடிசூட்டு விழா, ஊஞ்சல் விழாக்களில் தமிழ் மறைகள் ஓதப்பெற்றுவரும் உண்மையினை விரிவாக ஆராய்ந்து வெளியிட்டார்.

திருஞானசம்பந்தரின் 'தோடுடைய செவியன்' என்ற முதற் பதிகமும் 'சுந்தரரின் பித்தா பிறை சூடி' என்ற முதற் பதிகமும் மாணிக்கவசகரின் திருவெம்பாவையும், ஆண்டாளின் திருப்பாவையும் தென்னாட்டுக்குரிய கிரந்த எழுத்தில் எழுதப்பட்டு இன்னும் தாய்லாந்து நாட்டின் அரச விழாக்களில் பாடப்பட்டு வருகின்றன. இதனை, மலேயாப் பல்கலைகழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் பேராசிரியர் முனைவர் ச.சிங்காரவேலு கள ஆய்வு செய்து தாய்லாந்து அரச குருவின் உதவியால் ஒளிப்பதிவு செய்து, ஆய்வுக் கட்டுரை எழுதி முதல் உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்கில் படித்துள்ளார். இக்கட்டுரையில் நால்வர் காட்டிய நன்நெறி தாய்லாந்திலும் பரவியுள்ளதை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் சுட்டப்படும் மணிமேகலை என்னும் கடல் தெய்வம் தாய்லாந்து மக்களால் வழிபாடு செய்யப்பட்டதை காணலாம். மற்றும் மணிமேகலை வரலாற்றைக் கூறும் கதைப்பாடல்களும் அம்மானை பாடல்களும் இன்றும் தாய்லாந்தில் வழங்கிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்காசிய நாடுகளில் கி.பி முதலாம் நூற்றாண்டிலேயே இராமாயணம் பரவத் தொடங்கிவிட்டது. முதலில் வாய்மொழியாகவும் பிறகு நாடக வடிவிலும் அதற்கு பிறகு இலக்கிய வடிவிலும் இராமாயணம் இந்த வட்டார மக்களிடம் பிரபலமடைந்தது.

தாய்லாந்து இராமாயணத்தினை இராமாக்கியன், இராமகீர்த்தி என்றும் அழைப்பர். தென்கிழக்காசிய இராமாயணங்கள் வால்மீகி இராமாயணத்துடன் ஒப்பிடும் போது வேறுபட்டுள்ளன. அந்தவகையில், தாய்லாந்து இராமாயணத்தை ஐந்து வகையில் வெளிப்படுத்தி உள்ளனர்.

1. திறந்த வெளி சிற்பங்கள்
2. நாட்டிய நாடகம்
3. முகமூடி நாடகம்
4. அரசவை முகமூடி நாடகம்
5. பொதுவான நாட்டியம் என்பனவாகும்.

வான்மீகி இராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் தசரத மன்னின் மனைவியர் கோசலை, சுமித்ரை, கைகேயி என்போர் ஆவர். ஆனால், தாய்லாந்து இராமாயணத்தில் இவர்களின் பெயர்கள் வித்தியாசமாக காணப்படுகின்றது. கவுசுரியா, சமுத்ராஜா, கையோகேசி என பெயர் மாற்றம் அடைந்துள்ளன.

தாய்லாந்து இராமாயணம் கம்பராமாயணத்துடன் நெருங்கிய தொடர்புடையது. தமிழ்ச் சொற்களும் பெயர்களும் உள்ளன. கலைக்கோட்டி, இராமபட்டன், திரிபுரம்கென், சடாயு ஆகியன சில உதாரணங்களாகும்.

தாய்லாந்து இராமாயணம் ஆலயவழிபாடு, நாட்டியம், பொம்மலாட்டம், சிற்பம், ஓவியம் என பல துறைகளில் நீண்டகாலமாக செல்வாக்கு பெற்றிருந்தது. குறிப்பாக, தென்னிந்திய மரபில் வந்த இராமாயணம் என்பதால் வான்மீகி இராமாயணத் தாக்கம் அதிகம் இல்லை. வான்மீகி இராமாயணத்தில் அரக்கியாக வரும் சூர்ப்பனகை இதில், அழகிய பெண்ணாக இராமனை சந்திக்கின்றாள். தாய்லாந்து இராமாயணத்தில் அனுமானுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. இங்கு அனுமான் பிரமச்சாரியாக இல்லாமல் திருமணம் முடித்தவராக காணப்படுகின்றார்.

'நாங்' என்ற இராமாயண பொம்மலாட்டம் தாய்லாந்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. தலைநகர் பாங்கொக்கில் அமைந்துள்ள புத்தர் ஆலய சுற்றுவட்டாரங்களில் இராமாயணக் கதைக் காட்சிகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான யாவா தேசத்தில் இந்திய இலக்கியங்கள் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தன. அரசர்களாலும் வணிகர்களாலும் அவர்களுடன் சென்ற பிராமணர் பௌத்தசங்கத்தராலும் அவை அங்கு கொண்டு செல்லப்பட்டன.

இந்திய இலக்கியங்களை சாவகர் பயின்றதன் விளைவாக இந்து சாவக இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. ஜாவானிய இலக்கியங்களில் சமஸ்கிருத செல்வாக்குள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்து சாவக நூல்களில் 'அமரமாலா' மிகப்பழமையானது. ஜாவானிய சாசனங்களுள் வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் என்பன பற்றிய குறிப்புகள் உள்ளன.

**1. கிடுங் - இதிகாச புராணங்களை அடிப்படையாக கொண்டது.**
**2. தத்தரி - இதோபதேசம், பஞ்சதந்திரம் எனும் இலக்கியங்களை ஆதாரமாக கொண்டது.**
**3. சங்சத்தியவான் - சத்தியவான், சாவித்திரி கதையை அடிப்படையாக கொண்டது.**

ஜாவாவில் பிரதேச மொழியில் எழுந்த தழுவல் நூல்களில் அர்ச்சுன விவாக, பாலபாரத, பாரதயுத்த, குடாரமாலை, அகத்தியர் பர்வம், பிரமாண்ட புராணம் போன்றவை குறிப்பிடத்தக்கன. ருக்மணி தேவியை கிருஸ்ணன் வரித்தமை, ஜராசந்தனை கிருஸ்ணன் வென்றமை என்பவற்றை 'கிருஸ்ணாயன' எனும் நூல் விளக்குகின்றது. அயனின் தேவியும் தசரதனின் தாயாருமாகிய இந்துமதியின் மரணத்தை 'சமண சாந்தக' எனும் நூல் விளக்குகின்றது.

சமஸ்கிருத மொழியிலுள்ள 'ஹிருவம்ச' என்ற நூலை தழுவி பனுவர என்பவர் 'ஹரிவம்ச' எனும் நூலை தந்தார். காளிதாச மஹாகவியின் குமாரசம்பவத்தை ஆதாரமாக கொண்டு 'ஸ்மாதகனம்' எனும் நூல் எழுதப்பட்டது.

ஜாவாவில் 10ஆம் நூற்றாண்டிலேயே இராமாயணம் எழுதப்பட்டது. இது 'இராமவத்து' என அழைக்கப்படுகின்றது. இதில் பௌத்தமதத்தின் தாக்கம் உள்ளதால் உயிர்க் கொலை, தற்கொலை போன்ற அம்சங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. தசரதனுக்கு அளிக்கப்பட்ட சாபம், சூர்ப்பனகை மூக்கறுப்பு என்பனவும் தவிர்க்கப்பட்டுள்ளன. விபூடணன் தன் சகோதரனான இராவணனுக்கு புத்த சித்தாந்தத்தை உபதேசிக்கும் நீண்ட பகுதி இந்த இராமவத்து காவியத்தில் உண்டு.

மலேசியாவில் மலாய் மொழியில் இயற்றப்பட்ட இராமாயணத்தின் பெயர் 'ஹிக்காயத் ஸ்ரீராமா' என்பதாகும். இதில் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்களால் இப்பகுதிகளில் இராமாயணம் பரப்பப்பட்டதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. இந்த இராமாயணம் 13ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் உரைநடையில் இயற்றப்பட்ட ஒன்றாகும். இது முதன்முதலில் 1843இல் அச்சிடப்பட்டது. இராவணனின் பிறப்பு பற்றிய விபரிப்புடன் இது தொடங்குகிறது. இந்த இராமாயணத்தில் பாத்திரங்களின் உறவு முறையில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, சீதை இராவணனின் மகள் என்று சொல்லப்படுகின்றது. இராமனுக்கும் தேவி அஞ்சாதிக்கும் பிறந்தவன் அனுமன் என்றும் வாலி சுக்கிரீவனின் சகோதரி இந்த அஞ்சாதி என்றும் இராவணனின் மனைவி மண்டோதரிக்கும் வாலிக்கும் பிறந்தவன் அங்கதன் என்றும் பல வித்தியாசமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

இந்தோனேசியாவில் இராமாயணம் அதிக செல்வாக்கு பெற்றுள்ளது. யாவா, சுமத்திரா, பாலி ஆகிய வட்டாரங்களிலும் பல இராமாயணங்கள் உள்ளன. இந்தோனேசியர்களின் வாழ்கை முறையில் இன்றைய அளவிலும் இதுதார்மீக பங்காற்றி வருகின்றது.

லாவோஸ், நாட்டில் பல இராமாயணங்கள் வழங்கி வருகின்றன. வங்காள இராமாயணப் பின்னனியில் அமைந்த இராமாயணமும் இவற்றினுள் அடங்கும். அங்கு வழக்கத்தில் இருந்த இரண்டு இராமாயணங்கள் சென்ற நூற்றாண்டில் லாவோசிய மொழியில் அச்சிடப்பட்டன. தலைநகர் வியந்தின் கோவிலில் சுவரோவியமாக வரையப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் உள்ளது போல் சீதை இராமன் மீது காதல் கொள்ளும் நிலை இதிலும் வர்ணிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் சீதை இராவணனின் மகள் என்றும் கூறப்படுகின்றது.

வால்மீகி இராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் இராவணனுக்கு 10 தலைகளும் 20 கைகளும் உள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால், தென்கிழக்காசிய நாடுகளில் காணப்படும் இராமாயணத்தில் இவ்விடயம் கூறப்படவில்லை.

கம்போஜம் என்று முன்பு அழைக்கப்பட்ட கம்போடியாவில் இராமயணம் அதிக செல்வாக்கு பெற்றுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இங்கு 'அங்கோர்வாட்' கோவில் புகழ்மிக்கது. இந்த கோவிலில் இராமயண, மகாபாரத நிகழ்வுகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. பாற்கடலை கடையும் காட்சியில் வாலி பங்கெடுத்து கொள்வதாகக் காட்டப்பட்டுள்ளது. வால்மீகி இராமாயணத்தில் இந்நிகழ்வு கூறப்படவில்லை. எனினும் கம்பராமாயணத்தை பின்பற்றி இக்காட்சி உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. திருவாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்த கைலாய பரம்பரையினர் கம்போடியாவிலும் தாய்லாந்திலும் இக்கதை அம்சங்களை பரப்பி இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இராமகீர்த்தி எனும் பெயர் பெற்ற கம்போடிய இராமாயணம் 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயண கதைகள் 'லகோன் கோல்' எனும் பெயரில் நாட்டிய நாடகமாகவும் கம்போடியாவில் நடாத்தப்பட்டு வருகின்றது.

கம்போடியாவில் பவவர்மனின் குருவான சோமவர்மா சிவனுக்கும் சூரியனுக்கும் ஆலயம் அமைத்து அங்கு இராமாயண, மகாபாரதம் தொடர்பான விரிவுரைகள் நடாத்துவதற்கு அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தியதாகவும் இந்நாட்டில் உள்ள ஆலயங்கள் இராமாயண மகாபாரதம் தொடர்பான ஓலைச்சுவடிகள் நன்கொடையாக வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றன.

வியட்நாமர்களிடையே கி.பி 3ஆம் நூற்றாண்டிலேயே இராமாயணம் செல்வாக்கு பெற துவங்கியது. ஸ்ரீமாறா என்ற மன்னனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் இராமாயணக் கதை இடம்பெற்றுள்ளது. ஸ்ரீமாறன் என்ற பெயர் பாண்டிய மன்னர் பரம்பரைக்குரியது என்பதால் வியட்நாமுடன் அவர்கள் பழங்காலத்தில தொடர்பு கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த நாட்டில் 'வோன்-கான்' எனும் பகுதியில் உள்ள 7ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் வால்மீகியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

பிருதுவியின் மகனான, வோமன் எனும் நாயகனை கிருஸ்ணர் சங்கரிக்கும் நூலாகிய 'வோம காவியம்' எழுதப்பட்டுள்ளது. பிரபஞ்ச, என்பவரினால் 'நாகர கிருதாகம்' எனும் நூல் எழுதப்பட்டது. இவ்வாறாக, வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் காணப்பட்ட பல இந்து இலக்கியங்கள் தென்கிழக்காசிய நாடுகளில் பரவி அதிக செல்வாக்குப் பெற்றிருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக உருவத்தின் தத்துவம்

சோமசுந்தரம் ஷண்முகபிரியா, நான்காம் வருடம், தமிழ் விசேடகற்கை
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

மந்திரம் எல்லாவற்றுக்கும் முதன்மையாக அமைவது பிரணவ மந்திரமாகும். அப்பிரணவம் உலகம் ஒடுங்கும் வரை அதிர்ந்து கொண்டிருக்கும் உள்ளொலியாக, நாத தத்துவத்தின் அடிப்படையாக விளங்குகின்றது. 'ஓவாத சத்தத்து ஒலியே போற்றி' என்கிறது தமிழ்மறை. அவ்வொலி செவிகளுக்கு புலனாகும்போது 'ஓம்' என்று ஒலிக்கும். 'ஓம்' என்பதற்குரிய தமிழ் எழுத்தாகிய ஓகாரம் துதிக்கையுடன் கூடிய யானைமுகம் போன்றுள்ளது. 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் அமைபவர் விநாயகராவார்.

உலகத்திற்கு மூலமாய் தோன்றிய ஓங்காரம் திருமுகமாகவும் உலகங்களின் தொகுப்பாய் அமையும் இடம் பெருவயிறாகவும் உலகத்தைத் தாங்கும் ஆற்றல் காலாகவும் அமையப்பெற்ற திருமேனியே விநாயகத் திருவுருவமாகும். பிள்ளையாருக்கு கணபதி, விக்கினேசுவரர், விநாயகர், கஜமுகன், கணேசன் என்ற பெயர்களும் உள்ளன. பூத கணங்களுக்குத் தலைவர் என்பதனால் கணபதி என்ற பெயர் பெற்றார். தமக்கு மேலே தலைவர் இல்லாதவர் என்பதனால் அவரை விநாயகர் என்றழைக்கின்றனர். உலகத்தினுள் நின்று ஊறுபடுத்தும் அழிவுச் சக்திகளை அடக்கியாளும் திறமை உடையவர் விநாயகர். அவர் தம்மை நினைப்பவர்களின் விக்கினங்களை நீக்க வல்லவர் என்பதனால் 'விக்கினேசுவரர்' என்னும் பெயர் ஏற்பட்டது. அத்தகைய அழிவுச்சக்திக்கு அடையாளமாக நிலத்தைத் துளைத்து ஊறுபடுத்தும் பெருச்சாளி அவரது வாகனமாக அமைந்தது.

விநாயகருக்கு, ஏகதந்தன் என்று ஒரு பெயரும் உண்டு. ஒற்றைக் கொம்பன் என்பது அதன் கருத்து. வியாச முனிவர் மகாபாரதத்தைச் சொல்ல விநாயகர் அதை எழுதினார். இடையில் எழுத்தாணி உடைந்துவிட்டது. ஆனாலும், விநாயகர் எழுதுவதை நிறுத்தவில்லை. தனது தந்தத்தில் ஒன்றை ஒடித்து அதனைக்கொண்டு எழுதிமுடித்தார். முறித்தெடுத்த தந்தத்தை வலக்கரத்திற் பிடித்துள்ளார். ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்காகத் தன் தந்தத்தையே தியாகம் செய்தார். எனவே, ஒரு உயர்ந்த காரியத்தின் பொருட்டே ஏகதந்தன் ஆனார்.

விநாயகரின் திருவுருவம், பற்பல நுண்ணிய அற்புதத் தத்துவ நுட்பக் கருத்துக்களைக் கொண்டது. விநாயகரின் இரு திருவடிகளும் முறையே, அவர்தம் ஞானம், கிரியை என்னும் சக்திகளை உணர்த்தும். மிகப்பெரிய யானையின் முகமுள்ள விநாயகர், மிகச்சிறிய பெருச்சாளியை வாகனமாகக் கொண்டிருத்தல், அவரே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ளார் என்பதைக் காட்டும். பெருச்சாளி இருளை விரும்பும், கீழறுத்துச் சென்று கேடுவிளைவிக்கும். இது ஆணவமலத்தைக் குறிக்கும். எனவே, பெருச்சாளியை விநாயகர் தமது காற்கீழ்க் கொண்டிருத்தல, அவர் அறியாமையையும் செருக்கையும் அடக்கி ஆட்கொள்பவர் என்பதைப் புலப்படுத்தும். விநாயகரின் குறுந்தாள்கள் அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாத நித்திய இளமைத் தன்மையைக் காட்டும். மேலும், விநாயகரின் மூன்று கண்களும் முறையே சூரியன், சந்திரன், அக்கினி என்பவற்றைச் சுட்டும். இவரின் நீண்ட துதிக்கை, வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் தருகின்ற வல்லமையை உணர்த்தும்.

விநாயகர் எல்லா ஒலிக்கும் முற்பட்ட ஓங்காரத்தினின்று எழுத்தொலிகளையெல்லாம் வகுத்து எழுதிக் கலைகளை வளர்ப்பவர் என்பதைக் குறிப்பதற்காகவே ஒற்றை மருப்பு அவரது திருக்கரத்தில் அமைந்துள்ளது.

**"முத்தமிழ் அடைவினைமுற்படு கிரிதனில்**
**முற்பட எழுதிய முதல்வோனே"**

என்று திருப்புகழ் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது. விநாயகரின் மற்றொரு கரத்திலுள்ள மோதகம் அவர் பாதுகாக்கும் உலகத்திற்கு அடையாளமாகும். மேற்கரம் ஒன்றில் உள்ளது அங்குசம், அது உயிர்களின் செருக்கை அடக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது. மற்றொரு மேற்கரத்தில் பாசக்கயிறுள்ளது, அது எல்லாவற்றையும் ஒருவழிப்படுத்தி ஒழுங்கு செய்யும் ஆற்றலைக் குறிக்கின்றது. உலகம் சுழலும் போது அவற்றை எல்லைக் கடவாது வரம்புக்கு உட்படுத்துவதற்குப் பயன்படுவது பிள்ளையாருடைய திருச்செவியின் அசைவு என்று 'கல்லாடம்' என்னும் தமிழ் நூலில் ஒரு குறிப்பு வருகின்றது.

விநாயகர் மனிதர், தேவர், விலங்கு முதலிய அனைத்துயிர்களுக்கும் அருள்புரிபவர். ஆதலினால், அவரது திருவுருவில் இடைக்குக்கீழ் மனிதக்கூறும் இடைக்கு மேல் கழுத்து வரை தேவக்கூறும், அதற்கும் மேல் விலங்குக்கூறும் அமைந்து காணப்படுகின்றன. கடவுள் ஆண், பெண், அலி என்னும் நிலைகளைக் கடந்தவர். இதனைப் விநாயகரின் ஒற்றைக் கொம்புள்ள யானை முகம் உணர்த்துகின்றது. ஆண் என்றால் இருகொம்புகள் வேண்டும். பெண் என்றால் கொம்பு இல்லாமல் இருத்தல் வேண்டும். அலி என்றால் மதம் இல்லாமல் இருத்தல் வேண்டும். விநாயகர் ஆண், பெண், அலி என்னும் நிலையினராகவும் அவையல்லாதவராகவும் விளங்குகின்றார். விநாயகரின் விரிந்த நீண்ட பெருங்காதுகள், தன் அடியவர்கள் தம்முடைய குறைகளை கூறி முறையிட்டால், அவற்றை ஏற்று பரிவுடன் அருள்புரிந்து நலம் புரியும் இயல்புடையவர் என்பதை உணர்த்துகின்றன.

விநாயகருக்கு மோதகம் என்றால் மிகவும் பிடிக்கும். அவர் எல்லோருக்கும் இன்பமயமாக இருக்கிறார் என்பதுதான் மோதகத்தின் தத்துவமாகும்.

**'சுக்லாம் பாதம் விஷ்ணும்**
**சசிவர்ணம் சதுர்ப்புஜம்**
**பிரசன்ன வதனம் தியாயே**
**சர்வவிக்னோப சாந்தயே'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பிள்ளையார் சுலோகம் ஆகும். களங்கமற்ற ஞானமே உருவமானவர் விநாயகர். விநாயகரது உடை வெள்ளை என்பதைக் குறிக்கும் சொல் சுக்ல அம்பரம் ஆகும். விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர் என்பது பொருளாகும். சசிவர்ணம் என்பது சந்திரவருணமாகும், சதுர்ப்புஜம் என்பது கைகளைக் குறிக்கின்றன. பிரசன்ன வதனம் என்பது மகிழ்ச்சியைத் தரும் யானை முகமாகும். இந்தச் சுலோகம் எந்தவொரு பூசையையோ சடங்கையோ கருமத்தையோ தொடங்கும் முன்பு சொல்லப்படும்.

'ஓம் சுமுகாய நம
ஓம் ஏகதந்தாய நம
ஓம் கபிலாய நம
ஓம் கஜகர்ணகாய நம
ஓம் லம்போதாய நம
ஓம் விகடாய நம
ஓம் விக்னராஜாய நம
ஓம் கணபதியே நம
ஓம் தூம கேதுவே நம
ஓம் கணாதியஷாய நம
ஓம் பால சந்திராய நம
ஓம் கஜானனாய நம
ஓம் வக்கிரதுண்டாய நம
ஓம் சூர்பகண்ணாய நம
ஓம் ஏரம்பாய நம
ஓம் ஸ்கந்த பூர்வஜாய'

என்பது விநாயகரின் சோடாச்சர நாமமாகும். இப்பதினாறு திரு நாமங்களையும் மொழித்தாலும் கேட்டாலும் வித்வை, விவாகம், சுபம், சோபனம் முதலிய காரியங்களை எண்ணிய மாத்திரத்திலேயே இத்திருநாமத்தின் மகிமையால் நாம் தொடங்கும் நற்பணி செவ்வனே முடிந்து பேரும் புகழும் பெருமையும் நம்மைத் தானே வந்தடையும்.

விநாயகப்பெருமானைக் குறித்து விநாயக சதுரத்தி விரதமும் விநாயகசஸ்டி விரதமும் அனுஸ்டிக்கப்படுகின்றன. சதுர்த்தி விரதம் ஆவணி மாதத்துச் சுக்கில பட்ச சதுர்த்தியில் விநாயகக் கடவுளை நினைத்து மேற்கொள்ளும் விரதமாகும். சதுர்த்தியன்று கணபதிக்கு இரட்டை அறுகம் புல்லால் பூசை செய்தல் சிறப்பாகும். இவ்விரதத்தை அனுஸ்டிப்போர் பகலில் ஒரு பொழுது மட்டுமே போசனஞ் செய்தல் வேண்டும். இது தவிர கார்த்திகை மாதத்துத் தேய்பிறை முதலாம் நாளிலே தொடங்கி மார்கழி மாதத்து வளர்பிறை ஆறாம் நாள்வரை இருபத்தொரு நாட்களுக்கு விநாயகசஷ்டி விரதம் அனுஸ்டிக்கப்படுகிறது. இந்நாட்களில் கோவில்களில் விநாயகர் 'பெருங்கதை' படித்து விழா எடுப்பது வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையி**
**னாற் கண்ணிற் பணிமின் கனிந்து'** (கபிலதேவர்)

எனும் பாடலுக்கிணங்க ஞான வடிவமாகிய விநாயகரை வழிபடுவதனால் அனைத்து காரியங்களும் வெற்றியடைவதோடு முத்தி சித்திக்கும்.

**சில புண்ணிய காரியங்கள்**

தாய், தந்தையரைப் பேணிக் காத்தல்.
மனைவி கணவனிடம் கொண்ட பயபக்தி.
எல்லோருடனும் அன்புடன் பழகுதல்.
நண்பர்களுக்குத் துரோகம் செய்யாதிருத்தல்.
பலனை எதிர்பார்க்காமற் பகவானிடம் பக்தி செலுத்துதல்.

(ஆ-ர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவி சூழும் தடை நீக்கி
அல்லலருத்து ஆனந்தம் ஆகியதே
எல்லை மறுவா நெறியளிக்கும் வாதவூரெங்கோம்
திருவாசகம் எனும் தேன்.

ஓம் நமசிவாய
திருச்சிற்றம்பலம்

நமசச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிவார் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
நேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்ணாட்ட வந்தெய்தி

எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லா பிறப்பும் பிறந் திளைத்தேன் எம்பெருமான்

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தக ன்றுநுண்ணி யனே
வெய்யாய் தணியாய் இதமான னாம்விமலா
பொய்யா யினெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே

எஞ்ஞானமில்லா தயின்பப் பெருமானே
அஞ்ஞானம்த ன்னையகல் விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதியி ல்லாய்
அனைத்துலகும் ஆக்கு வாய் காப்பாய்
அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழிம்பின்
நாற்றத்தின் நேரியாய் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்தப் பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திந்தாய் எம்பெருமான் வலிவினையேன் தன்னை
மறைத்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கும் மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் நிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தான் மேல் வந்தருளி நீள்கழலகள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற்ச் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றருத்துப் பாரிக்கும் ஆரியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்றப் பெருங்க ருணைப் பேராரே
ஆராவ முதேயள விலாப் பெம்மானே
ஓராதாரு ள்ளத்தொ ளிக்கும் ஒளியானே
நீராயு ருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனேய ந்தம்நடு வாகியல் லானே
ஈர்த்துயே னையாற்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறி வாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையில்
ஊற்றானா உண்ணா ரமுதேயு டையானே
வேற்றுவி காரவிடக் குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ம ய்யா அரனே ஓ யென்று யென்று
போற்றிப்பு கழ்ந்திருந்து பொய்கெ ட்டுமெய்யானார்
மீட்டுயங்கு வந்துவினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம்ப யின்றிடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டினா ட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்குச்
சொல்லிய பாட்டின் பொருளுணர் ந்துசொல் லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கு
பல்லோரும் ஏத்தப் பணிந்து

தொல்லையிரும் பிறவி சூழும் தடை நீக்கி
அல்லலருத்து ஆனந்தம் ஆகியதே
எல்லை மறுவா நெறியளிக்கும் வாதவூரெங்கோம்
திருவாசகம் எனும் தேன்.

ஓம் நமசிவாய
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



ISSN 2362-034x
9 772362 034009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org